உ

முருகன் துணை.



# முசுகுந்த நாடகம்

(கந்தபுராணம், கந்தவிரதப் படலத்தைத் தழுவியது)

ஆசிரியர்:

மகான் - வண்ணச்சரபம்

அருள்மிகு. தண்டபாணி சுவாமிகள்

திருவாமாத்தூர்.

SCANNED

134707.

சென்னை,

தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் நிதி உதவியுடன்

வெளியிட்ட மலர்.

1968

திருவாமாத்தூர் கௌமாரசபை வெளியீடு 91

உ
குருவே துணை.



190/86

# முசுகுந்த நாடகம்

(கந்தபுராணம், கந்தவிரதப் படலத்தைத் தழுவியது)

ஆசிரியர் :
மகான் - வண்ணச்சரபம்
திருப்புகழ்ச் சுவாமிகள், முருகதாச சுவாமிகள் என வழங்கும்
**அருள்மிகு. தண்டபாணி சுவாமிகள்**
திருவாமாத்தூர்.

சென்னை, தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் நிதி உதவியுடன்
வெளியிடப்பட்டது.

1968. செப்படம்பர் 6, 7, 8 தேதிகளில்
மதுரையில்,
**தமிழ் நாடகமேதை - தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகள்**
திருவுருவச்சிலை திறப்பு விழா நடைபெற்றபோது
அவ்வை - திரு. தி. க. சண்முகம், M. L. C. அவர்களால்
வெளியிட்ட மலர்.

1968.

பை உரிமைப் பதிவு.

சப்பக நூலகம் ★ சென்னை-600 008. ★
134707

புலவர் தி. மு. சங்கரலிங்கம்,
தமிழாசிரியர்,
கௌமார மடாலயம்,
திருவாமாத்தூர் PO.
விழுப்புரம் (வழி)
605602

இந்நூல் கிடைக்குமிடம்:

**தலைவர்,**
கௌமார மடாலயம், திருவாமாத்தூர்,
விழுப்புரம் அஞ்சல்.
(தெ. ஆ. மாவட்டம்)

3—00

O-, 1KKA, K:g
N68

**தி. க. சண்முகம்,** M. L. C.,
"அவ்வையகம்"
139-B, லாயிட்ஸ் சாலை,
சென்னை - 6.

**தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம்,**
கிரீன்வேஸ் ரோடு,
சென்னை - 28.

உ

குருவே துணை.

# முன்னுரை

வெண்பா

முத்தமிழில் ஒன்ருய் மொழிநா டகத்தமிழ்நூல்
வைத்த முசுகுந்தன் மாண்கதையாய்—வித்தகர்சொல்
சந்தத் தமிழ்த்தண்ட பாணி தவமுனிவன்
தந்ததுணர் வார்மெய்த் தவர்.

எல்லாம் வல்லதான பரம்பொருள் ஒன்றேயாம். அது படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலைச் செய்யும்பொருட்டு, பிரமன், திருமால், உருத்திரன் என்ற முப்பெயர் கொண்டுளது. அன்றியும் உருவம், அருவம், உருவாருவம் என்ற மூன்று தன்மையிலும் நிலவுகின்றது உலகில் மக்கள் வாழ்வுக்கு ஏற்ற ஒளிப்பொருளாக, சூரியன், சந்திரன், அக்கினி என்ற மூன்ருய் ஒளிர்கின்றது. மேலும் அவ்வுயிர்களுக்கு இன்றியமையாதனவாகி ஒன்றைவிட மற்ருென்று உயர்வுடையதான கல்வி, செல்வம், ஞானம் என்ற மூன்றையும் வழங்குகின்றது. இவற்றுக்குரியதான – கலைமகள், திருமகள், மலைமகள் என்ற மூவுருவில் திருவருட்சத்தி ஒன்றே நிலவுகின்றது. அல்லாமலும், பாலை, புவனை, திரிபுரை என்ற மூவுருவில் விளங்குவதாயும் கூறுவர். அதுபோல, தமிழ்மொழி ஒன்றே. இயல், இசை, நாடகம் என்ற முப்பெயரில் மூவகையாய்த் திகழ்கின்றது.

இந்த முத்தமிழுக்கும், சுவை, நிறம், தெய்வப்பண்பு இவற்றை மூவிதத்தில் ஒப்புமை கண்டனர் ஆன்ருேர். அதாவது, இயற்றமிழுக்கு நிறம் கருப்பு. சுவை–தேன், தெய்வம் உமையவள் எனவும், இசைத்தமிழுக்கு நிறம் செம்மை. சுவை அமுதம், தெய்வம் திருமகள் எனவும், நாடகத்தமிழுக்கு நிறம் வெள்ளை. சுவை பால், தெய்வம் கலைமகள் எனவும் அமைத்துள்ளனர்.

எவ்வாறு? இயற்றமிழ், மிகக் கற்றறிந்தவரே பொருளறிந்து மகிழவல்லது. ஆதலால் தேனை உவமித்தனர். அது மிக உயர்ந்த பொருளேயாயினும் எளிதிற் பெறமுடியாததும், மிகுந்த சுவையினதும், ஒருவன் அதிக முண்ண முடியாமல் தெவிட்டுவதுமாம். எனவே கருந்தமிழ் என்றனர். இரண்டாவதான இசைத்தமிழ், ஓரளவு கற்றவரும்கூட பொருளறிய முடிவதாயுள்ளது. எனவே அமுதம் என்றனர். அது, வேண்டிய அளவு உண்ணத்தக்கதாய், செம்மையினதாயிருத்தலால், செந்தமிழ் என்றனர். மூன்ருவதான நாடகத் தமிழ், கற்றவரும் கல்லாதவரும் எளிதிலறியவல்லது. பாடவும், படிக்கவு மெளியது. எனவே பாலினை உவமை கூறினர். பாலர்முதல் விருத்தர் வரை உண்ண இனியது பால். ஆகவே, அதனை வெண்தமிழ் என ஒப்புமை கூறினர்.

"வள்ளையங் குழைப் பார்ப்பதி மலர்த்திருமடந்தை
வெள்ளை வாணியென்றுள ஒருமூவரில் விளங்கிக்
கள்ளை வானகத் தமுதினைப் பாலினைக் கடுக்கும்
கொள்ளைமுத்தமிழ் பிறப்பிடம் குலவுதென்பொதியை"

என்று வண்ணச்சரபம்–அருள்மிகு தண்டபாணி சுவாமிகள் தாம் இயற்றிய 'புலவர் புராணம்" பொதியாசலப் படலத்திற் கூறியுள்ளனர். இது சிந்திக்குந்தோறும் இனிமைதரும் நயமாகும். அன்றியும், ஏனைய மொழிகள்போல, தமிழ் என்ற பெயரினைமட்டும் கொள்ளாமல், இனிமையும் தெய்வப்பண்பையும் இயல்பாயமையப்பெற்றது. எனவேதான் "தெய்வத்தமிழ்" என்றனர். தெய்வம் வேறு, தமிழ் வேறல்ல. ஆகவே, தமிழ் நூற்களைத் தெய்வப் பண்பமைய வழிபடுகின்றோம்.

இவ்வித முத்தமிழில், முன்கூறியதுபோன்று, மிகக் கற்றோரே யறியும் இயற்றமிழ், கடுஞ்சுவையும், ஓரளவு கற்றோருமறிவது இசைத்தமிழ் இன் சுவையும், எத்தகையோரும் எளிதில் அறிவது நாடகத்தமிழ் இளஞ்சுவையும் ஆக உள்ளதென்பதாம். நாடகத்தமிழ்–காணவும், கேட்கவும் பொருந்தி–ராகம், தாளம், பாவம், நடிப்பு இவற்றோடு தொடர்பமைய நடிக்கும்போது, நம்மையறியாமலே மனம் அதில் ஒன்றிவிடுவது காண்கிறோம். நாடகவாயிலாக வரலாற்றினை மக்கள் மனதிற் பதியச்செய்வது எளிது. என்றோ நடந்த வரலாற்றினை இன்று நாம் காணும்படி அவற்றுக்கேற்ற பாத்திரங்களையும், வெளியலங்காரங்களையும் சேர்த்து இசையுடன் நடிக்கும்போது யார்தான் உணர்ச்சி வசப்படாதவர்கள்?

பாரதக்கதையில், துரியோதனனிடம் கண்ணபிரான் சென்று பாண்டவர் கட்காக ஐந்து நாடோ, ஐந்து வீடோ கேட்கும் சந்தர்ப்பத்திலும், துரியோதனன் சபையில் துரௌபதையைத் துகிலுரிந்த நேரத்திலும், பிரகலாதனை இரணியன் துனபப்படுத்தியகாலத்திலும், உண்டான நிகழ்ச்சியை, நாடகத்திற்கண்ட சிலர், மன உணர்ச்சி வயப்பட்டவராய், மேடைமீதேறி ஒறுத்ததும், சமாதானம் செய்ததுமான செய்திகளையும் கேட்கிறோம். திரைப்படக்காட்சியில்வரும் சோகக் காட்சி காணும் சந்தர்ப்பங்களில் மனம் ஒன்றிக் காணும் போது நம்மையறியாமலே கண்ணீர் கசியக் கலங்குவது காண்கிறோம்.

இராமாயணம் – பாரதம்போன்ற இதிகாசங்கள், நந்தனர், குசேலர் போன்ற அருளாளர்கள், அரசர்கள், தவசிகள், இன்னோரன்ன பலரது வரலாறுகள் நாடகமாக அன்றுமுதல் இன்றுவரை நம் நாட்டில் நிலைத்து மக்களை நல்வழிப்படுத்தி வரலாறுகளை நினைவுபடுத்திவருவது கண்கூடு. அத்தகைய நாடகங்கள் நம் தமிழ் நாட்டிற் பலவுண்டு. அதன் ஆசிரியர்களும் பலருளர். அவருள், அணிமையில் நம்மிடையே வாழ்ந்து தமிழ் நாடகங்கள் பலவற்றை உருவாக்கியும் தான் நடித்தும், பிறரை நடிக்கவைத்தும் அறிஞர் பெருமக்களை மகிழ்வித்தவர்–நாடகமேதை, தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகள் ஆவர்.

அத்தகைய சங்கரதாஸ் சுவாமிகளது குருவாக விளங்கியவர் அருள்மிகு–வண்ணச்சரபம், தண்டபாணி சுவாமிகள். இவ்விருவர், தமிழ் தோன்றிய பாண்டிநாட்டின் தவமாகத் தோன்றியவர்கள் தண்டபாணி சுவாமிகளாற்

பாராட்டப்பெற்றவர் சங்கரதாஸ் சுவாமிகள், முருகதாச சுவாமிகள் என்றும் திருப்புகழ்ச் சுவாமிகள் என்றும், வேறு பெயர்கொண்ட தண்டபாணி சுவாமிகள் இளமைமுதல் முருகப்பெருமான் மீதமைந்த உபாசனை காரணமாக எளிதில் எப்பாடல்களையும் பாடி ஏட்டிலெழுதினர். இயல் இசையென்ற வகையிற் பல நூல்களியற்றினர். இவர்பால் முருகப்பெருமான் தோன்றி, இந்த முசுகுந்த அரசன் வரலாற்றை நாடகமாகப் பாடும்படி உத்தரவிட்டனர் என்ற செய்தியை இந்நூலின்முன் உள்ள பாயிரக்கவியாலறியலாம். அது சமயம், வளவனூரையடுத்த குமாரபுரி மடத்தின் ஆதி முதல்வரான சண்முக சுவாமிகளும், காரணப்பட்டு–கந்தசாமிப்பிள்ளையென்பவரும் ஒத்தோதினர் என்றும் கூறுகின்றார்.

இந்நூல் நாடகமாயினும் நடிப்புக்குப் பயன்படாது, கதா காலட்சேப முறைக்கேற்ப அமைந்துள்ளது. இடையே வசனம், பாடல்கள் சேர்க்கப் படவேண்டும். இவ்விவரம் இந்நூலின் இறுதிக்கவியிற் கூறியுள்ளனர். எதற்கும் ராக–தாள–பாவங்கள் அமையவேண்டுவது முக்கியம். இதற்கு கந்தபுராணம், கந்தவிரதப் படலத்தும், முருகப்பெருமான் தெய்வயானை திருமணப்படலத்தும், முசுகுந்த மன்னன் வரலாறு கூறப்பட்டுள்ளது. அதனை ஆதாரமாகக்கொண்டு தனதநுபவமும் கலந்து முறைப்படுத்திக் கூறியுள்ளார். முசுகுந்தன் முருகன் திருமணக்காலத்தில் உடனிருந்து கண்டுகளித்த பேரருளாளன். தமிழ் நாட்டில், தமிழரசன் ஆளவேண்டுமென்ற பெரு விருப்பமுள்ளவர் சுவாமிகள். அதற்கு முசுகுந்தனையே உவமை கூறினர். இவர் திருவாமாத்தூருக்கு முதலாவதாகவந்த சமயம். அவ்வூர்ச் சிவன்கோயில் முகப்பிற்சென்று ஓர் கவி கூறினர்.

> பசுக்காப்புச் செய்துநெடும் பாரூர்பவற்றை
> நசுக்காமை ஆதிநிலை நாட்டி—முசுக்கோமான்
> போல்வாழ் ஒருவன் புகழ்விளக்க வேண்டும்காண்
> சேல்வாவி மாதையர சே. என்பதாம்.

இந்நூலை இவர் பாடியபோது, அன்று உடனிருந்த அன்பர் சிலர் நாடகமாக நடிக்க விரும்பினர். அக்காலத்துக்கேற்ற முறையில் தெருக்கூத்தாக ஆடினர். சுவாமிகளை உடனிருந்து காணும்படி வேண்டினர். அதற்குச் சுவாமிகள்–முசுகுந்தன் முருகனை நாடித் தவம்செய்து, காட்சிபெறும் சமயம் வருகிறோமென்று இசைவு கூறினர். அவ்வாறே சென்று ஆசிகூறிவந்தனர் என்பது கேள்வி. இதனால், முருகனை நேரே காட்சிகாணத் தவமியற்றி வரும் சுவாமிகள், நாடகத்தில் வருவதையாவது காண விரும்பினரென்பதை அறிகின்றோம். தனிக்கவி ஒன்றில்

> நாடகத்தில் ஓர்புலவன் நல்லடியார் போற்றிருட்டு
> வேடமிட்டுற் றாலும் மிகமகிழ்ந்து—தாள்தலையிற்
> கொண்டு மகிழும் குறிப்புணர்த்தும் கோமான்என்
> தொண்டுவப்பத் தோன்றுதென் றோ. என்றும்,

"மெய்யடியார் பதத்துகளைச் சிரசிற்ருங்கி
மேனியெங்கும் உத்துளமா நீறுபூசி
செய்யநிறக் கல்லாடை ஒன்றும், தண்டும்
திருக்கரத்திற் கொண்டு,கண்டி திகழப்பூண்டு
துய்யநிறக் கோவணமும் கீளும்சாத்தித்
சொந்தமெனக் கொருவன் அவன்சுதன் நான் என்று
பொய்யன்ஒரு கூத்தில்வந்து தோன்றினலும்
புகழுமவர் கவுமாரம் பொருந்தினேரே"

என்று கௌமாரதீப நூலினும் கூறுகின்ருர்.

இதை நோக்கும்போது, சேரமான்பெருமாள்நாயஞர் உவர்மண் தூக்கி வந்த வண்ணனை, மேலே வெண்ணிறம்கண்ட அளவில் வணங்கவும், அவன் அடியேன் வண்ணன் என்று கூறவும், உடன்அவர், நீவிர் யாராயினும் ஆகுக, அடியவர் வேடம் நினைப்பித்தீர் என்ற உண்மைவரலாற்றுடன் இதனை ஒப்புநோக்கற்குரியது. முசுகுந்தன் தமிழரசனென்பதோடு முருகன் அடியவனும் ஆவன் எனவே, இதனல் முருகன் அடியவருள் ஒருவன் வரலாறு கூறியதுமாயிற்று. இவரியற்றிய "கௌமாரத்தொகை"யில் "முசுகுந்தன் அடிபோற்றி" என்று கூறியுள்ளார். இதன் வரலாருன கதைச்சுருக்கம் அடுத்துள்ளதால் விவரமறியலாம்.

இன்று தமிழ் நாட்டில் பல நாடகங்களைச் சிறந்தமுறையில் நடித்துவரும், உயர்திரு. டி. கே. சண்முகம் அவர்கள், அவரது துணைவர் பகவதி அவர்கள் ஷ தண்டபாணி சுவாமிகள் விழா, சென்னையில் நிகழும்தோறும் உடனிருந்து சிறப்பிப்பவர்கள். அவரது குருநாதர், தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள். எனவே, அப்பெரியாரது திருவுருவச்சிலை நிறுவப்பெறும் இந்த நன்னளில் தமிழ்நாடு நாடக சங்கீத சங்கத்தினர், ஷ நாடக சங்கீத சங்கத்தில் நிதி உதவிப்பொருளின் துணைகொண்டு இந்நூல் பதிப்பாகி வெளிவருகின்றது.

பல பாடல்கட்கு இசையில்வல்ல நூலாசிரியர் தாமே இராக, தாளம் அமைத்துள்ளனர். பிற சில பாடல்கட்கு பாடுபவர் இசைக்கு ஏற்றவாறு பாடும் நிலையில் விடுத்தனர்போலும்.

இந்நூலின் கருத்தினையும் இசைமாண்பினையும் முசுகுந்தன் சிறப்பையும் அறிந்துபோற்றி உய்யுமாறு முருகப்பெருமான் திருவருள் வழங்குவாராக.

இன்னணம்,

நூலாசிரியரின் பெயரர்,

**தி. செ. முருகதாச ஐயா,**
தலைவர்,
கௌமார மடாலயம்.
திருவாமாத்தூர், விழுப்புரம் P. O.

தங்கல் :
தண்டபாணி சுவாமி மடம்,
அடிவாரம், பழனி,

# முசுகுந்த நாடகம்—கதை விளக்கம்

கயிலையங்கிரியில் சிவபெருமானும் உமாதேவியும் மன உற்சாகத்துடன் ஒரு வில்வமரத்தின்கீழ்த் தனியேயிருந்தருளினர். உமாதேவியிடம் அரிய செய்திகளைக் கூறியிருந்த சமயம், அந்த மரத்தினது மேலிருந்து ஒரு குரங்கு அந்த வில்வத் தழைகளைப் பறித்துக் கீழிருந்த இறைவன் இறைவிமீது அதன் இயற்கை முறைப்படி தூவிக்கொண்டிருந்தது.

இறைவனும் இறைவியும் ஒன்றுகூடியிருந்ததால் உலகம் இன்பமடைய வழிசெய்தது. சிவமும் சத்தியும் வேறுபட்டுப் பிரிந்திருந்தால் உலகில் உயிர் களிடத்தில் இன்பம் நிகழாது. எச்செயலும் நடைபெருது என்ற உண்மையை அன்பர்கட்குப் புலப்படுத்தியது. அந்தவிதம் குரங்கு தன் இயல்பாகச்செய்த செயல் உமையவளுக்குச் சிறிது மன வருத்தத்தை விளைத்தது. இறைவன் உமையே! நாம் இங்குள்ள இச்சமயத்தில் நமக்கினிய வில்வத்தால் அருச் சித்தது. அதற்குச் சினப்பது முறையல்லவென்று கூறினர். இறைவன் குரங் கைப் பார்த்துக் கருணையுடன் நீ உலகிற்சென்று அரசுசெய்து வாழ்க என அருளினர். அந்தக் குரங்கு—சாதாரண உலகிலுள்ளதுபோலல்லாமல் ஞான உணர்வுண்டாகி, கீழிறங்கி வணங்கி நின்றது. இறைவனிடம் அரசு வேண் டாம் என்றது.

இந்த இடத்தில் தங்களைக் காணக்கூடிய பேறுபெற்றேன். இதைவிட உலக அரசுரிமை உயர்வல்ல என்பதை அறிவேன். என் இயல்பான அறி யாமை நீங்கி, உமது கருணையின் தன்மையை அறிந்த பேறு எளிதல்லவே. சூரியனும் சந்திரனும்போல உங்களிருவரையும்கண்டபின் இதைவிட அரசு மேலாகுமா. செங்கோல் முறையே ஆட்சிபுரிந்தால் கொடியவரது வசை வரும். கொடிய முறையில் அரசு நடத்தினுல் உயர்ந்தோரது பகை ஏற்படும். எங்கேயாவது யாவர்செய்த பாவங்கட்கும் ஈடுபடுத்தி நரகில் அமிழ்த்தும் அல்லாமலும்,

பூவுலகில் வாழ்கின்ற அரசர்களைவிட இங்கே உங்கள் திருமுன் தங்கி ஊர்கின்ற சிறு எறும்பும்கூட மேலென்றறிந்துள்ளேன். முன்னொருநாள் தங் கள் சந்நிதியில் விளக்கின் நெய்யைத் திருடியுண்ணவந்த எலியின் முகம் பட்டபோது விளக்கின் திரி தூண்டப்பெற்று ஒளிவிட்டதுகண்டு, அரசுசெய்ய அருளினீர்கள். அது மாவெலிச்சக்கரவர்த்தியென்ற பேருடன் அரசு புரிந் தது. அதுபோல, இயல்பாக வில்வத் தழையைப் பறித்துத் தூவியதற்காக, அரசு புரியும்படி ஆணையிட்டீர்கள்! இது உங்கள் கருணையை விளக்குகிறது. ஆனுலும் உண்மையைப்பற்றி ஆட்சி செய்தாலும் மக்களது அவச்சொல் லுக்கு ஆளாக்கும். அத்தகைய கேவலமான அரச பதவி வேண்டாம் என மேலும் வேண்டியது.

சிவபிரான் நாம் சொன்னது பொய்யாகாது. ஏற்றுச் செல்க என்றனர். அப்படியானுல் இன்று நடந்த இச்செயல் நினைவிலிருக்கும்படியும், இந்தக் குரங்குமுகமும் அடுத்தபிறவியில் அமையும்படியும் அருள்க என்றது. அப்

படியே ஆகட்டுமென்ற அருள்மொழிப்படி அயோத்தியை ஆண்டுவந்த மாந்தாதா என்ற அரசன் மகனுகப்பிறந்தது குரங்கு முகமும், கையில் வேலும் பெற்றிருந்த காரணம்பற்றி முசுகுந்தன் என்ற பெயர் ஏற்பட்டது. இவன் பிறந்தான் வளர்ந்தான்–உலகம் போற்றியது. அறம் தழைக்குமென்று வாழ்த்தினர் மக்கள் முசு-குரங்கு, குந்தம்-வேல்.

இந்நிலையில் முசுகுந்தன் உலகமுற்றும் ஆட்சிசெய்ய விரும்பினுன் இதற்குத் துணையாக, முருகப்பெருமான் திருவருள் வேண்டுமென்று சிந்தித்தான். இதற்கேற்ற வழிவகைகளைச் சொல்லியருள்பவர் யார் என்று ஆய்ந்தான். வசிட்டரே தக்காரெனத் தேறினுன். அவர்முன் சென்றுன், அவரைப் போற்றினுன். அவர் இவனுக்கு இவ்வித உணர்வு எப்படி ஏற்பட்டதெனச் சிந்தித்தார். இறைவன் அருளிய வரத்தின் பலனென்றறிந்தார். முசுகுந்தனை நோக்கி முருகப்பெருமானை வழிபட்டுத் திருவருள்பெற மூன்று விரதங்களைக் கூறினுர்.

கிழமையில் வெள்ளி, திதியில் சட்டி, நட்சத்திரத்தில் கிருத்திகை. இம் மூன்றையும் முன் நோற்றுப் பேறுபெற்றுரையும், நோன்பு செய்யும் முறைகளையும், கூறினர். அவ்வாறு செய்து முருகன் தெரிசனம் பெற்றுன். முசுகுந்தன் வேண்டுதலுக்கிரங்கிப் பெருமான் நவவீரர்களைத் துணையாகிச் செல்லப் பணித்தனர். ஆனுல் வீரர்கள் இசையாமல் மறுத்தார்கள். நாங்கள் ஒரு தவறும் செய்யவில்லையே?உமது சந்நிதியில் தொண்டுசெய்யும் நாங்கள் உலகில் குரங்கு முகமுடைய மனிதன் ஆட்சியில் வாழ அருளியது ஏனென்று விண்ணப்பித்தனர். முருகன், நீங்கள் என்மீது அன்புடையராதல் போல அவனும் மிக்க அன்புடையவன். நாம் சொன்னதனை மறுத்தீர்கள். ஆதலால், இந்தத் தேவவுருமாறி மனிதராகக் கடவீர் என்றுர். அவர்கள் அஞ்சி, மனிதராகப் பிறக்க ஆணையிடாமல் இந்தமட்டாவது தப்பினுேமே என்று முசுகுந்தனிடம் துணையாகி வந்தனர். முருகன் திருவுரு மறைந்தான். அரச பதவியில் நீதி முறைப்படி முசுகுந்தன் ஆட்சி புரிந்தான், அறம் தழைத்தது. மறம் அழிந்தது. பின் அயோத்தியைத் தன் சகோதரரிடமுதவி, கருவூரில் தங்கி அரசுபுரிந்துவந்தான்.

இந்த நிகழ்ச்சியிப்படியாக, தேவருலகிலிருக்கும் தேவமாதர்களான ஊர்வசி, ரம்பை, மேனகை, திலோத்தமையாதியோர், முன்பு தெய்வயானை திருமணத்தின்போது நவவீரர்கள் அழகில் ஈடுபட்டு மோகமுற்றிருந்தனர். அந்த வினை காரணமாக, அவர்கள் பூமியில் பிறந்தார்கள். அவர்கள் எல்லோரும் நவவீரர்கள் மனைவியராயினர். அவருள் வீரவாகுதேவர் மகளாக சித்திரவல்லி என்ற பெண் பிறந்தது அவளை முசுகுந்தன் மணந்தான். அவள் ஆசைப்பட்டு ஒரு கிளியை வளர்த்து வந்தாள். அதை எமன் மனைவி விரும்பினள். எமன் தன் தூதர்கள்மூலம் யாருமறியாமல் கைப்பற்றி மனைவிக்கு உதவினுன், அறிந்த சித்திரவல்லி கவலைப்பட்டாள். முசுகுந்தன் அறிந்து எப்படியும் கண்டு கொண்டுவர, உன் தந்தைமார்கள் உள்ளனர் என்றெல்லாம் கூறித் தேற்றினன். அரசன் கூறக்கேட்ட வீரர்கள் எமனிடம் போய்ப் போர் புரிந்தனர். யாரென அறியாமல் போர்செய்து பின்பு தருமதேவதை இயமனிடம் வந்து உண்மை உரைக்க நவவீரரென்றறிந்து கெஞ்சிக்

கிளியைத் தரப்பெற்று, அரசமாதேவிக்குதவினர். தருமதேவதை இடபவடிவி லிருக்குமென்பது நூற்கருத்து.

பின் சிலநாளில் சித்திரவல்லி கருக்கொண்டாள். அது சமயம் பலாக் காய்மீது ஆவல் கொண்டாள். அறிந்த அரசன், ராணி பலாக்காய் உண்ணும்போது நம்நாட்டில் யாருமுண்ணவேணுமென்றெண்ணி அதன் உற்பத்தி மிகுந்த மலையாள நாட்டுக்கு ஒற்றர்களை ஏவினன். அவ்வரசன் கொடுக்க மறுத்தான். சில வீரரை ஏவினன், அவர் சென்று கேரள அரசனிடம் போர் செய்தனர். பின் அவனஞ்சி வேணமட்டும் காய்கனி உதவினன். அங்கி வர்மன் என்ற மகனைப்பெற்றனள் அரசமாதேவி.

தேவருலகில் இந்திரன் வலாசுரனென்ற அசுரனது போரினல் மிகவும் இடர்ப்பட்டுள்ள சமயம், முசுகுந்தனது உதவியால்தான், தனக்கு வெற்றி கிடைக்குமென்றறிந்து தூதனை ஏவினன். அவன் வேண்டலுக்கிரங்கினன். தங்கள் நாட்டின் செல்வமழிந்ததையும் இவனல் நலம்பெறவேண்டியதையும் தூதனல் கேட்டு, வானவர் ஊர்சென்றுவர மனையாளிடம் அநுமதிபெறச் சென்றான் மன்னன். அவளிடம் வானுலகு சென்றாலும் அங்குள்ள சுக போகங்களை விரும்பித் தங்கமாட்டேன் என்று கூறி, மகனிடமும் வேண்டிய செய்தி கூறிச் சென்றான். இந்திரனிடம் சென்று உனக்குப் பலவிதமான விருதுகளிருந்தும் உலக மனிதனன என்னை விழைந்தீரே என்று பணிவுரை பகர்ந்தான். அவன் உமது தகுதி அறிவேன். முருகப்பெருமான் திருவருள் பெற்றுள்ளீர். அவரது துணைவர்களையே படைத்தலைவராயுடையீர் எனக் கூறி உபசரித்துத் தன் குறைகளைக் கூறினன்.

முசுகுந்தன் வலாசுரனைப் போரிட்டுக்கொன்று வெற்றிபெற்று இந்திரனை மகிழ்வித்தான். இந்திரன் மகிழ்ந்து முசுகுந்தனுக்கு உபசாரம் சொல்லி விருந்தூட்ட எண்ணினன். இந்திரன் வழக்கமான வழிபாட்டினைச் செய் தான். அப்போது இறைவனும் இறைவியும் அரசன் கண் காணும்படி விக்கிரகமாகக் காட்சி தராமல் முன் கயிலையில் கண்டதுபோல சீவதிசையாக விளங்கினர். நாம் உன்னுடன் வருவோம். பெற்றுச்செல்! எனக் குறிப்பிட் டனர் பெருமான். பின் விருந்து நடந்தது. ஊர் திரும்ப எண்ணினன் மன் னன். வேண்டும் பல பொருளுதவினன் இந்திரன். அவற்றைப்பெற்று, பூசையிலிருந்த மூர்த்திகளையும் தரும்படி கேட்டான். இந்திரன், இம்மூர்த்தி எனக்குரியதல்ல. திருமால் தனது மார்பின்மீது வைத்துப் பூசித்ததாகும். இதன் உதவியாலேயே திருமால் மகப்பேறு முன் பெற்றார். உமையின் சாபம் நீங்கினர். எனக்கு அவரே உதவினர் அவர் சம்மதம் பெறுக என்றான். திருமால் சம்மதம் தரமாட்டார் என்பது அவன் எண்ணம்.

முசுகுந்தன் திருப்பாற்கடல் சென்றான். திருமாலைப் போற்றினன் மூர்த்திகளைப் பெற்றுக்கொள்ள உத்தரவிட்டார் திருமால். வந்து சொன்ன தைக் கேட்ட இந்திரன் அம்மூர்த்திகளைத்தர மனமிசையவில்லை. இருப்பினும் திருமால் ஆணையிட்டதால் அதுபோல வேறு மூர்த்தியைத் தனது தேவ கம்மி யனல் உண்டுபண்ணித் தந்தான். அவை வெறும் மூர்த்தியாயிருந்தன.

தான் கண்ட சிவகளையில்லை. ஆகவே அதைப் பெற்றுக்கொண்டு இது வல்ல தான் கேட்டதென்றான் அரசன். இப்படியே வேறு வேறாக ஆறு தடவை பெற்றான். பெற்றும் மகிழாத மன்னனது விருப்பத்தை மாற்றவும் மறுக்கவும் முடியாமல் சுயம்பு மூர்த்தியைக் கொடுத்தான். மகிழ்ந்து ஏழு மூர்த்திகளையும் பெற்றுப் பூவுலகம் வந்தான். இயல்பான மூர்த்தியைத் திருவாரூரிலும், மற்ற ஆறு மூர்த்திகளை ஆறு தலங்களிலும் நிறுவி வேண்டிய வழிபாடு செய்தான், பல சிறப்புச்செய்தான். இம்மூர்த்திகள் ஏழும் உளியிட்டுச் செதுக்கப்படாத சிறப்பினது. திருவாரூர் தியாகராசப்பெருமான் தலைமையாயும், மற்றவை இதன் அங்கமாயும் அமைந்தன. சப்த விடங்கர் என்ற பெயர் இம்மூர்த்திகள் பெற்றனர். விடங்கம் என்றால் அழகு என்பதாம். திருவாரூர்ப் பெருமானை வீதிவிடங்கப்பெருமான் என்பர் சேக்கிழார். மனுச்சோழன் மகனைத் தேர்க்காலில் இட்டபோது சிவபிரான் தெரிசனம் வீதியிற் காட்டியபோதுள்ள பாடலில்,

''விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங்கப் பெருமான்'' என்பதாம்.

திருவாரூரில் முசுகுந்தன் பெயரால் வழிபாடு, தினமும் ஆயிரம் நாம அருச்சனை நடைபெறுகிறது. முசுகுந்தன் அரசுபுரிந்த தலைமை நகரம் கருவூர் என்பர். சிலகாலம் பொறுத்து தன் மகன் அங்கிவர்மனுக்கு முடி சூட்டுவித்து, அரசன், நவவீரர் அரம்பையர், முதலியோருடன் கைலை சென்றனன் என்பதாம்.

கதை விளக்கம் முற்றிற்று

தி. க. சண்முகம்
"அவ்வையகம்"

139-பி, லாயிட்ஸ் சாலை,
சென்னை-6,
29—8—68.

# அணிந்துரை.

மகான் வண்ணச்சரபம் - புலவரேறு, அருள்மிகு. தண்டபாணி சுவாமிகள், வடலூர் வள்ளலார் காலத்தில் வாழ்ந்த பெரும்புலவர். புலவர் புராணம், தமிழலங்காரம், கௌமார முறைமை முதலிய பல அரிய நூல்களை அருளிய ஆசிரியர். நாடகப் பேராசானாக விளங்கிய தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகளின் பேராசிரியரும் இவரேயாவர்.

இத்தகைய சிறப்புவாய்ந்த சுவாமிகளாற் பாடப்பெற்றது "முசுகுந்த நாடகம்" என்னும் இந்நூல். முருகப்பெருமான் ஆணை யிட்டதால் இந்நாடகத்தைப் பாடியதாக சுவாமிகளே பாயிரத்திற் கூறுகின்றார்.

நான் வணங்கும் ஆசானுக்குப் பேராசானாகத் திகழ்ந்த அருள்மிகு. தண்டபாணி சுவாமிகளின் திருவாக்கினைப்பற்றி என்ன கூறமுடியும்? இதுபோன்ற நாடகங்கள், நாட்டிய நாடகங் களுக்கு நல்ல முறையிலே பயன்படுத்தலாம் என்பது என் கருத்து. நடனமணிகள் இத் திருப்பணியினைச் செய்ய வேண்டு கிறேன்.

பழங்கால நாடகங்களில் ஒன்றாகக் கருதப்பெறும் "முசுகுந்த நாடக" நூலினை வெளியிட முன்வந்த திருவாமாத்தூர், கௌமார சபையினருக்கும், இப்பணிக்கு நிதி உதவிய தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கத்தாருக்கும் என் உளங்கனிந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அன்பன்,

அவ்வையகம்,
சென்னை-6,
29—8—68.

(ஒப்பம்) **தி. க. ஷண்முகம்.**
கீலக ஆவணி 14

நூலாசிரியர் பெயரர்

## தவத்திரு. தி. செ. முருகதாச ஐயா அவர்கள் அளித்த

# பதிப்புப்பாயிரம்.

சந்தச் சரபத் தவத்தண்ட பாணி,முசு
குந்தனிசை நாடமாக் கூறலுற்ருர்—முந்துதமிழ்
நாடகசங் கீதசபை நண்ணுமன்பர் அச்சிலிதைப்
பீடமையச் செய்தார் பெரிது. 1

சங்கர தாசர் தவமுருக தாசரிவர்
துங்கத் தமிழ்ச்சீர் துலக்கினேர்—இங்கிவர்தம்
தன்மையறி டி.கே. சண்முகமும் மற்றையரும்
நன்மைசெய்கின் ருர்தமிழ்க்கு நன்கு. 2

ஆடகமா மன்றில் அரன்நடித்தான், பார்வதியும்
கூடநடித் தாள்,வேள் குலமலைதோ(று)—ஆடலுற்ருன்
குஞ்சரத்தோன் ஆடினன், கொண்டல்வண்ணன் ஆடினன்
எஞ்சலற ஆடாதார் யார்? 3

இயலும் இசையும் இயைந்து,கண்டு கேட்க
நயமளிக்கும் நாடகச்சீர் நாடிப்—புயலவிரும்
சோலைக் குயிலிசையைத் தோகைநடம் ஆடுவதைச்
சாலநுவன் ருர்புலவர் தாம். 4

கந்தனருள் பெற்றிந்தக் காசினியை ஆண்டமுசு
குந்தனைப்போல் மன்னன் குலவியே—இந்தப்
புவியிலரச சாட்சி பொருந்தவிழைந் திந்நூல்
நவின்ருர்வண் ணச்சரபர் நன்கு. 5

சங்கர தாசமுனி சார்முருக தாசமுனி
இங்கவிரும் இன்னேர் இசைநட்பால்—சங்கத்
தமிழ்நா டகம்வளர்ந்த தன்மைபோல் நாளும்
தமிழன்பர் வாழ்க தழைத்து. 6

சங்கர தாசத் தவர்தமுரு வச்சிலையை
இங்கமைக்கும் நாளிலவர் இன்குருவாம்—துங்கத்
தவமுருக தாசர் தரும்நா டகநூல்
நவவெளியீ டாதல் நலம். 7

தந்தையென வந்த தவச்செந்தி நாயகனர்
தொந்த முறஇடையே தோயநுவல்—சொந்தக்
கவிகள் இறுதியினிற் காணஅச்சிட் டுள்ளோம்
நவிலுமன்பர் கொள்க நயந்து. 8

# நன்றியுரை.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த புலவர் பெருமக்கள் பலராவர். அவர்களுள் புலமை, தவம், அருளியல், செயலாற்றல், நூல்கள் பல இயற்றுதல் ஆகியவைகளில் தன்னிகரற்று விளங்கிய பெரியாராகத் திகழ்ந்தவர் மகான் – வண்ணச்சரபம் அருள்மிகு. **தண்டபாணி சுவாமி**களாவர். இவர்களாற் பாடப்பெற்ற நூல்கள் சாத்திரம், தோத்திரம், இலக்கணம், வரலாறு, புராணம், கீர்த்தனைகள் என்ற பல பிரிவுகளில் உள்ளன. இயற்றமிழ், இசைத் தமிழ் முறையில் இந்நூல்கள் அமைவன ஆயினும் நாடகத் தமிழுக்குத் தொண்டு செய்யும் வகையில் **முசுகுந்த நாடகம்** என்ற இவ் வரிய நூலையும் அருளியுள்ளார்கள்.

முருகப்பெருமான் அருளுரைக்கேற்ப இந்நூலைத் தாம் பாடியதாகப் பாயிரம் பகுதியிலும், கச்சியப்ப முனிவர் பாடிய கந்தபுராண நூலின் ஒரு பகுதியான கந்தவிரதப் படலத்தை தழுவிப் பாடியதாக இந்நூலின் இறுதியிலும் நூலாசிரியரான அருள்மிகு. தண்டபாணி சுவாமிகள் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நூல் இதுவரை அதாவது சுவாமிகளால் ஏட்டுச்சுவடியில் வரைந்து சுமார் நூறு ஆண்டுகட்கு மேலாகியும் பதிப்பாகாமல் இருந்துவந்து தற்போது பதித்து வெளிவரும் வாய்ப்பைத் திருவருள் கூட்டிவைத்துள்ளது.

எங்கள் வெண்டுகோளை விரும்பி ஏற்று இவ்வரிய நூலைப் பதித்து வெளியிடவும், தன் நிதியிலிருந்து மான்ய உதவி செய்யவும் முன்வந்த சென்னை, தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கத்தினருக்கும்,

நூலாசிரியரின் மாணவரான தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகள் திருவுருவச்சிலைத் திறப்புவிழா, மதுரையில் 1663 செப்டம்பர் 6, 7, 8 தேதிகளில் நடைபெற்றபோது இந்நூலை வெளியீடு செய்தும், அணிந்துரை வழங்கியும், இந்நூல் வெளிவருவதில் பேரார்வம் காட்டியும் சிறப்பித்த நாடகத்துறை முன்னணிக் கலைஞர் அவ்வை – திரு. தி. க. சண்முகம், எம். எல். சி. அவர்கட்கும்,

நூலாசிரியர் வரைந்த ஏட்டுச்சுவடியிலிருந்து எடுத்தெழுதிக் குறிப்புரை வரைந்தளித்த சுவாமிகள் பெயரரும், என் தந்தையாருமாகிய தவத்திரு. தி. செ. முருகதாச ஐயா அவர்கட்கும்,

குறித்த காலத்தில் அழகுற அச்சிட்டளித்த விழுப்புரம், அனுமான் அச்சியந்திரசாலையினருக்கும் நன்றியறிதலும், பாராட்டும் கூறி மகிழ்வதில் தமிழகம் கடமைப்பட்டுள்ளதென்றால் அதில் நானும் ஒருவன்தானே.

திருவாமாத்தூர்,
விழுப்புரம் P. O.
4—9—68.

அன்பன்,
**தி. மு. சங்கரலிங்கம்,**
தமிழாசிரியர், கௌமார மடாலயம்.

கவிஞர், எஸ். டி. சுந்தரம், M.L.C.,
செயலாளர்,
தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம்.

கிரீன்வேஸ் ரோடு,
சென்னை - 28.
5—9—'68.

# மதிப்புரை

திருப்புகழ் சுவாமிகள் என வழங்கும் தவத்திரு. தண்டபாணி சுவாமிகள் சுமார் 125 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் வாழ்ந்தவர். "முத்தமிழ்ப் புலவர்" என்று உலகம் பாராட்டிய பெரும் புலவர். இயல், இசை வல்லுந ராகத் திகழ்ந்த அம்மகான் நாடகத்திற்கும் இணைந்த முறையில் இயற்றிய கவிதை நூல் முசுகுந்த நாடகம் ஆகும். இந்நூல் காலட்சேபம் செய்வதற்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளது.

புராணங்களைப் படைப்பது புலவர்கள் தொழில். ஆனால் அந்தப் புலவர்களுக்கொரு புராணத்தை அருளிச்செய்த புனித குருவாவர் தவத்திரு தண்டபாணி சுவாமிகள். தில்லைத் திருவாயிரம்—திருவரங்கத் திருவாயிரம்—பழனித் திருவாயிரம், இவ்வாறு ஆயிரமாயிரமாக, பல்லாயிரம் பாடல்களைப் பாடிப் பரமனுக்கு அணிவித்த அருட்சுடர் மாமுனிவர் 'முசுகுந்த நாடகம்' என்ற இந்த இனிய இசை நாடகத்தை ஆக்கி அருள் புரிந்துள்ளார்கள். இன்று நாம் போற்றும் தமிழ் நாடகத் தந்தை தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகள் நமது தண்டபாணி சுவாமிகளிடம் ஆசிபெற்றவர் என்றறியும்போது அவ ருடைய அரிய புலமையை நாடகக் கலைஞர்கள் எளிதே புரிந்துகொள்ளலாம்.

* * * *

அரச குமாரனுகப் பிறந்த முசுகுந்தன் கந்தவிரதம் அநுட்டித்து, அருள் பெற்று, நவவீரர்களைத் தனது படைவீரர்களாக அடைந்து, பகை வீரர்களை வென்று, பூவுலகில் புகழ்மிக்க அரசு செலுத்தி, பின்னர், கயிலை சேர்ந்ததை விவரிக்கும் கதையே 'முசுகுந்த நாடகம்'.

கயிலையில் நந்தி தேவனையே கட்டியக்காரனுக அமைத்துத் தொடங்கும் முசுகுந்த நாடகத்தின் கதை எக்காலத்திற்கும் ஏற்ற ஓர் அறிவுரைக்கோவை யாக விளங்கும்.

என்றும் மறையாத அடிப்படைக் கருத்தை வைத்து, எளிய, இனிய தமிழில் கலை விருந்தளிக்கும் இந்நூலை வெளியிட நிதி உதவி வழங்கிச் சிறப் பிக்கும் வாய்ப்பை, தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் பெரும் பேருகக் கருதுகிறது.

இந்நூலை உரிய காலத்தில் வெளியிட்ட சுவாமிகளின் குலவழித் தோன் றல் வித்துவான், தி. மு. சங்கரலிங்கம் அவர்களுக்கு சங்கம் நன்றி தெரி வித்துக் கொள்ளுகிறது.

தவத்திரு. தண்டபாணி சுவாமிகளைப்போன்ற மகான்களின் அருள் வல்லமையால்தான் நமது கலைகள் காலத்தால் அழியாமல் உயிர் வாழ்ந்திருக் கின்றன. கலைகளுக்கெல்லாம் கலையாக விளங்கும் கடவுள் நெறியை அறிவு உணரும்படி சொல்லும் அன்பு முறையே நாடகக் கலை.

கலை வாழ்க ! கருணை வாழ்க ! நலம் வாழ்க !

(ஒப்பம்) **எஸ். டி. சுந்தரம்,**
செயலாளர்,
தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம்.

மகான் - வண்ணச்சரபம்

# அருள்மிகு. தண்டபாணி சுவாமிகள் வரலாறு.

( சுருக்கம் )

தென்பாண்டி நாட்டுத் திருநெல்வேலியில் 28—11—1839-ல் சைவ வேளாண்மரபில் செந்தினாயகம் பிள்ளை, பேச்சு முத்தம்மாள் இவர்கட்குத் தமிழகம் செய்த தவப்பயனாகத் தோன்றியவர் அருள்மிகு. தண்டபாணி சுவாமிகள். கருவிலே திருவுடையவராக விளங்கிய இவர். இளமையிலே நுண்மான் நுழைபுலம் மிக்கவராக விளங்கினார். சீதாராமர் என்ற பெரியாரிடம் விநாயகர் மந்திரம், லட்சுமி மந்திரம் இவைகளைத் தெரிந்துகொண்டதோடு ஆறெழுத்தருமறையையும் உபதேசமாகக்கொண்டார். அதுமுதல் வேற்பூசையில் ஆர்வம்கொண்டு ஆறெழுத்தைச் செபித்துவரலானார். இதன்பயனாக இனிய தமிழ்க்கவிகளை இயற்றும் வல்லமையும் பெறலானார். இதனை,

வளவிலுள பாலரொடு பலவாறு விளையாடி
வருகின்ற நாளில் என்னை
வலியவந் தாட்கொண்டு வேலாயு தப்பூசை
வாஞ்சைக்கடற் குள்விட்டு
குளம்விரவு பாலன்ன மதுரத் தமிழ்க்கவிதை
கொழிக்கும் நலம் உதவி.........

என்று சுவாமிகளே தம் நூலில் குறிப்பிடுகிறார்.

வண்ணம் என்ற சந்தப்பாக்களைத் தடையறப்பாடுகின்ற காரணத்தால் **வண்ணச்சரபம்** எனவும், திருப்புகழ்க் கவிகளைத் தெள்ளியமுறையில் இயற்றுவது குறித்து **திருப்புகழ்ச்சுவாமிகள்** எனவும், முருகப்பெருமான் திருவருட்பண்புக்குரிய அடிமை என்ற கருத்தில் **முருகதாச சுவாமிகள்** எனவும், லங்கோடு, கௌபீனம், காவியுடை அணிந்து, கையில் தண்டாயுதம் தாங்கி, உடல்முழுதும் திருநீறணிந்து, உருத்திராக்க மாலைபூண்டு திகழ்ந்தமையால் **தண்டபாணி சுவாமிகள்** எனவும் பல பெயர்கள் இவருக்கு ஏற்பட்டன. இவையேயன்றி பெற்றோர் இவருக்குச் சூட்டிய பெயர் **சங்கரலிங்கம்** என்பதாகும்.

சர்வசாதாரணி என்று முருகனால் அருளப்பெற்ற எழுத்தாணியின்மூலம் பனையோலைச் சுவடியில் இலட்சம் தமிழ்ப்பாடல்களைப் பலவிதமான நூல்களாக எழுதியருளினார்கள். தாம் பாடிய நூல்களைப்பற்றிக் குறிப்பிடும்போது

மும்மணிக் கோவைபல, மாலைபல, அந்தாதி,
மூவகைப்பல இன்னவா
முதுநெறிப் பனுவல்பல, புதுநெறிப் பனுவல்பல
முத்தமிழ்ச்சுவை வழாமல்
இம்மணிற் புலவர்பலர் மகிழ்வுற மொழிந்துளேன்
இப்போதும் நுவல்கின்றேன்.
இன்னமும் பகருவேன்.........

என்று கூறியுள்ளார்கள். அவர்கள் பாடிய பாடல்களுள் இன்றைக்குக் கைவசமிருப்பன ஐம்பதாயிரத்திற்கும் மேம்பட்ட பாடல்களாகும். ஏனையவைகளை சுவாமிகளே முருகன்மீது கொண்ட ஊடல் காரணமாகவும், வைராக்கியம் காரணமாகவும் அனலில், புனலில் சிதைத்துவிட்டனர்.

சமயபேதச் சார்பற்ற பெருநெறிக் கொள்கையுடன் விளங்கிய இவர் திருவரங்கத்திருவாயிரம், பழனித்திருவாயிரம், தில்லைத்திருவாயிரம், தெய்வத் திருவாயிரம், ஏழாயிரப்பிரபந்தம் போன்ற சமய நூல்களும், புலவர்புராணம், திருவாமாத்தூர்த் தலபுராணம், அருணகிரிநாதர் புராணம் போன்ற வரலாற்று நூல்களும், அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம், வண்ணத்தியல்பு போன்ற இலக்கண நூல்களும், முசுகுந்த நாடகம் என்ற நாடக நூலும், பல கீர்த்தனைப்பாக்களும், கௌமார முறைமை, தியானுநுபூதி போன்ற சாத்திர நூல்களும், மனுநெறித்திருநூல், நாலகுநூல் போன்ற நீதி நூல்களும், எல்லாக் கடவுளர்மீதான துதி நூல்களும் பாடியருளியுள்ளனர்.

பலதலங்கள் வழிபட்டு ஆங்காங்குள்ள தெய்வங்கள்மீது துதி நூல்கள் பாடினர். கடல் கடந்தும் சென்று தெய்வநெறிவாழச் சீவகருணை வாழத் தொண்டுபுரிந்தார். சென்றவிடமெங்கும் சமயத்துடன் தமிழுணர்வை வளர்த்தார். "எக்கடவுட்கு எவர் உரிமை பூண்டுற்றாலும் எனக்கது சம்மதம், முடிவில் ஏகந்தானே" என்ற கொள்கையுடையவர்.

முருகப்பெருமான் திருவுருவக்காட்சியை ஒருமுறை நேரே காண விரும்பிய இவர், திருநெல்வேலியருகேயுள்ள திருமலை என்ற முருகன்தலம் சென்று மலைமீதேறி அவனருட் சந்நிதியில் பலவாறு வேண்டித் துதித்தும் தம் எண்ணம் நிறைவேறாமையால் "மாளும் இவ்வுடலொடு மீளேன்; அவனருளிருந்தால் காக்கட்டும்" என்ற உறுதியுடன் அம்மலையிலிருந்து உருண்டார். அதுசமயம் முருகப்பெருமான் இவரது உடலிற் சேதமுறாமல் கரத்தாட்கொண்டார்.

தாம் பாடிய அருள் நூல்களை அரங்கேற்றிய சென்னை, வேலூர், புதுவை போன்ற இடங்களில் வலிய உண்டான வாதங்களை வென்று பலராலும் பாராட்டப்பெற்றார். வடலூர் இராமலிங்க சுவாமிகளோடு பலமுறை கண்டு இருவரும் தம்முடைய கருத்துக்களைக் கலந்து பேசி மகிழ்ந்தனர். இதனை,

"கூடலூரில் ஒருமனையில் குலவும் வடலூரனைக்கண்டு
பாடல்மதுரம் கலந்தருந்தி" — என்றும்

"எவளவும் பேதமின்றி என்கருத்திசைந்தே சொன்னான்"—என்றும் சுவாமிகள் தம் நூல்களிற் பலவாறு குறிப்பிடுகின்றார்.

"ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளின் அமிசமாகத் தோன்றியுள்ளாய் நீ" என்று பன்முறை முருகன் இவரிடம் அருளினான் என்பதை,

ஏரார் தமிழ்பாடும் எனைக் கிளியென்(று)
ஓராயிரம் உண்மை உரைத்தனனே-என்பதுபோலப் பல நூல்களில் குறிப்பிடுகிறார்.

சுவாமிகளின் தவத்தையும், புலமையையும் கண்டு போற்றிய பல பெரியோர்கள் இவரிடம் அரிய சந்த இலக்கணங்களைப் பாடம்கேட்டு ஆசிரியராகக் கொண்டனர். சிலர் குருவாகக்கொண்டு ஆறுசமய கடவுளரின் அருமறை உபதேசம் பெற்றனர். பலதலங்களை வழிபட்ட இவர் பசுக்கட்குக் கொம்பருளிக் காத்துவரும் ஸ்ரீ அபிராமேஸ்வரப்பெருமான் திருக்கோயில்கொண்டு விளங்கும் விழுப்புரத்தையடுத்ததும் நடுநாட்டுச் சிவதலங்களில் சிறந்ததுமான திருவாமாத்தூர்ச் சிவதலத்தில் எல்லைதாண்டா விரதமுடன் தங்கித் தவம்புரிந்து 5—7—1898-ல் ஞானசமாதி கொண்டனர். இவரது சமாதித் திருக்கோயில், கௌமாரமடாலயம், ஏட்டுச்சுவடிகள் ஆதியன அன்பர் பலருடைய ஆதரவுடன் சுவாமிகள் பரம்பரையினரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

அருள்மிகு. தண்டபாணி சுவாமிகள் புகழும், நூற்கருத்துகளும் அன்பர்களிடையே பரவி, முழுப்பயன் பெற்றுவக்க எல்லாம்வல்ல முருகப்பெருமான் திருவருள் துணைபுரிவதாக.

வாழ்க திருவருள்!



மகான் – வண்ணச்சரபம்

**அருள்மிகு. தண்டபாணி சுவாமிகள்.**

28—11—1839. 5—7—1898.

உ

முருகப்பெருமான் துணை

# முசுகுந்த நாடகம்

## பாயிரம்

### கொச்சகக்கலிப்பா

கந்தன்வந்து முசுகுந்தன் கதையையொரு நாடகமாச்
செந்தமிழாற் பாடென்று செப்பியதாற் சொல்கின்றேன்
சந்தம்இசை தாளநயம் தவறாமல் முடித்தருளும்
தந்தமொன்று காட்டுமெழில் தந்திமுகன் தாளிணையே. (1)

### அறுசீர்க்கழிநெடில் விருத்தம்

காரணப்பட் டூரில்வளர் கந்தசுவா மித்தொழும்பன் கழறென் றேற்பச்
சீரணவுங்[1] குமாரபுரிச் [2] சண்முகமாமுனியும்அன்பிற் செப்பென்றோதத்
[3] தாரணவுந் தடம்புயத்து முசுகுந்தன் சரித்திரத்தைச் [4] சலதி சூழும்
பாரணங்கின்தலையிலுள்ளார் முழுதறிய நாடகமாப் பகர்கின்றேனே. (2)

---

பாயிரம். 2. 1 குமாரபுரி – வளவனூரின் மேற்பகுதிக்குரிய பெயர். 2 சண்முகமாமுனி என்பவர் அங்கு மடம் ஒன்றைத் தோற்றுவித்த தலைவர். இவர் தண்டபாணி சுவாமிகளின் வணக்கத்துக்குரியவராயிருந்தவராவர். 3 தார் – வெற்றிமாலை. இது அரசர்க்குரியது. 4 கடல்.

தனதன தந்தன தனதன தந்தன
தனதன தனனு தனதனு.

தாளம்–ஏகம்–தோடையம்

அருள்பொழி யுங்[1]கய முகமொடுசந்ததம் அடியவர்சிந்தையில்
உலவியபொருளாம், முதல்வரே
தெருள்மறையின்றலை மிசையில குடிம்பொருள்
[2]சிறுமுனிவன்செவி யிடைநுவல்குருவாம்,–முருகரே
மருமலிபங்கய மலரில்[3]விரிஞ்சனுள் மகிழ்வுறும்[4]இங்கித
மொழிபயில்அனம்நேர் கலைமினே
பொரு[5]குலிசம்புனை [6]மகபதியின்புறு புகழ்முசுகுந்தன(து)
இயல்புறுபலபா அருள்மினே. (3)

தனனதன தந்ததன தனனதன தந்ததன
தனனதன் தந்ததன தனனதன தனனு—தனதானு

தாளம்–ஜம்பை, இராகம்–கெம்பீரநாட்டை

கயிலைமலையின்[1]தலையில் அமரரொடுதொண்டர்நனி
கழறியபெருந்துதிகொள் செவியில்[2]இருவளைபூண் — அரனுரே
[3]வெயில்நிலவுமிழ்ந்தஇரு சுடரெனவிளங்குபடை
விறலுறுமுகுந்தன்உரு வமும்உடையகுயில்போல்—உமையாளே

---

3. 1 கயமுகம்–யானைமுகம். இது கணபதியைக் குறிக்கும் 2 குறு முனியாகிய அகத்தியர். 3 வாசனைமிக்க தாமரைப்பூவில் வசிக்கும் பிரமன், 4இனியமொழி, 5வச்சிரப்படை, 6தேவேந்திரன், இவன், நூறு யாகங்களைச் செய்து இந்திர பதவியைப் பெற்றவன் ஆதலால் 'மகபதி' எனப்பட்டான். முசுகுந்த மன்னனுக்கு அவனது பகைவனுன வலாசுரனைக் கொன்று வெற்றி தந்த காரணம்பற்றி, ''மகபதி இன்புறு புகழ்'' என்ருர். விவரம் பின்னர்க் காண்க.

4. 1 உச்சி, 2 காதில் சங்கினைக் குண்டலமாக உடையவர். 3 வெய்யிலையும், நிலவையும் வெளிப்படுத்துவது, சூரியன், சந்திரன். இவையிரண்டின் தன்மையில், சக்கரமும் சங்கும் உடையவர் திருமால். அவரது திருமேனியின் கருமை அல்லது பச்சை நிறமுடைய குயிலை ஒப்பவள் உமையவள். குயில் என்ற உவமைபற்றிக் கருப்புநிறம் கொள்ளலாம். பச்சை நிறமென்று கொண்டால் உமையவளின் குரலோசைக்கு குயிலைக்கொள்ளலாம்.

அயிலணிதரும்[4]பவள மலையெனநெடும்புவியின்
[5]அசலமுகடெங்கும்நடம் இடு[6]சரணகுருவாம் — முருகோனே
மயிலுறழ்கவின்[7]சசியும் மகபதியும்இன்பமுற
மகிழுமுசுகுந்தனது கதைபகரும்வலிநீர்—அருள்வீரே. (4)

## தோத்திரக் கீர்த்தனை

இராகம்–கலியாணி. தாளம்–ஆதி

### பல்லவி

முசுகுந்தன் சரித்திரக் கீர்த்தனை பாடிட
முதிரருள்புரிவீரே—என்மீதன்பாய்—முதிரருள்புரிவீரே.
[1]கடாட்சம்வைத்து — முதிரருள்புரிவீரே.

### அநுபல்லவி

[2]அசுகைத்தானவர்குல நாசகெம்பீரனும்
அண்டர்கள்பரவும்ஒய் யாரனுமாகிய முசுகுந்தன்

### சரணங்கள்

[3]தந்திமுகம்பொருந்தித் தழைக்கின்றகாதரே
[4]தாரகப்பொருள்சொல்லும் சண்முகநாதரே
நந்திமத்தளங்கொட்ட ஆடிய[5]பாதரே
நாராயணன்முதல் [6]நவிலும்நன்னீதரே—முசுகுந்தன்

வெள்ளியதாமரைப் பூவுறு[7]மங்கையே
[8]வேழங்கள்ஆட்டும்நீர் விரும்பிடும் நங்கையே
[9]புள்ளிறைக்கொடிகொளும் நாரணன்தங்கையே
[10]புராந்தகன்சடையினுள் பொலிதருகங்கையே. முசு.

---

4 முருகனது திருமேனி செந்நிறம் எனவே பவளம் என்றார். 5 மலையின் உச்சி. 6 திருவடி, 7 இந்திராணி. மயிலின் சாயலை மாதர்கட்கு உவமை கூறுமுறையில், இந்திராணிக்கு ஒப்புக்கூறியதாம்.

5. 1 கடைக்கண்–சிறப்புப்பார்வை. 2 அசுகை–அழகும், அசுரர்குல நாசமும், கெம்பீரமும்: ஒய்யாரமும் உடைய முசகுந்தன் எனக்கொள்க. 3 யானைமுகம், 4 பிரணவப்பொருள், 5 சிவபிரான், 6 திருமால் முதலான எல்லாக் கடவுள் வடிவமும் உடைய, 7 கலைமகள், 8 யானைகள் இருபுறமும் துதிக்கை வழியே தண்ணீர்விட இருப்பவள் திருமகள். 9 பறவைபரசனை கருடனை, வாகனமாயுடைய திருமாலின் தங்கை உமையவள், 10 திரிபுரங்களை நீற்றியவரான சிவன். புர அந்தகன்–புரங்கட்கு எமன் என்பதாம்.

[11]சூரியன் முதலாகச் சொல்பல தேவரே
[12]சுகபரி பூரண சுகுணசு பாவரே
[13]சீரிய குருநிலை யுணர்பிர பாவரே
[14]திருப்புகழ்க் கவிமிகச் செப்புமநன் நாவரே.

முசுகுந்தன்சரித்திரக் கீர்த்தனைபாடிட
முதிரருள்புரிவீரே. (5)

## விநாயகர் கீர்த்தனை

இராகம்–ஆரபி. தாளம்–சாப்பு (திசிரம்)

ஆனைமுகத்துடன் ஐந்துகரங்கொளும்
ஐயனைக் கைதொழுவாம்.

### அநுபல்லவி

[1]சோனைமு கிற்குலமும் நாணம தம்பொழி
தூயனைச் செல்வவி நாயக மூர்த்தியை. ஆனை

### சரணங்கள்

எண்ணிய எண்ணமெல் லாமும்மு டிந்திட
ஈனக்[2]கலியிருள் ஓடிவி டிந்திட
நண்ணிடும் ஞானக் கடலிற்ப டிந்திட
ஞானம்பெருக்கும்அஞ் ஞானம் ஒடிந்திட. ஆனை

விக்கினம் யாவும் விலகி ஒழிந்திட
மேதகு செந்தமிழ்ப் பாடல் பொ ழிந்திட
[3]வக்கிரக் கோளின் பகைகள் அழிந்திட
[4]வண்டர்செய் ஆண்மையும் வம்புங் கழிந்திட ஆனை

[5]சந்திர சேகர னார்முதன் மைந்தனைத்
[6]தானவர் கோனைத் தடிந்தகைத் தந்தனை
முந்திய பூசைஎங் குங்கொளுஞ் சொந்தனை
[7]மோகமில் லாமுனி வோர்செயுஞ் சிந்தனை

ஆனைமுகத்துடன் ஐந்துகரங்கொளும்
ஐயனைக் கைதொழுவாம். (6)

---

11 சூரியன் முதலான என்றதால் நவக்கோள்களைக் கொள்க. ஆதித்யாதி நவக்கிரகம் என்பது வழக்கு 12 எங்கும் நிறைந்த சற்குணமான அமைதி பெற்ற அநுபூதியுடைய பெரியோர்கள். 13 குருநாதருடைய உபதேசப்படி தவம்புரியும் சிறப்புடையவர். 14 தெய்வத் துதிசெய்யும் நாவே நல்ல நா. என்றதால், உலக மக்களைப் புகழ்பவர் நா–பயனற்றதென்பது தெளிவு.

6. 1 நீருண்ட மேகம், 2 வறுமை, 3 ஒன்றுக்கொன்று மாறுபட்ட, 4 தீயோர், 5 சந்திரனையணிந்த சிவன், 6 கயமுகன் என்ற அசுரனைத் தனது தந்தமொன்றை முறித்து ஏவிக்கொன்றவர் கணபதி, 7 உலக இச்சை.

## சுப்பிரமணியர் கீர்த்தனை

இராகம்–காம்போதி, தாளம்–தி. சாப்பு

### பல்லவி

[1]கருணாகர முருகா—கதிர்வேலவா
கருணாகர முருகா.

### அநுபல்லவி

[2]அருணா புரியிலன்று அறைந்ததை மறந்தாயோ
அடியேன் றனக்குன்னை அன்றியோர் துணையுண்டோ

ஆறுமாமுக மோடுபன்னிரு
கூறுபாடுறு தோளும் மன்னிய. கருணாகர

### சரணங்கள்

[3]திருமா மலையிலன்று அளித்தது மெய்யானாற்
தீவினைப் பயன்வந்து மேலிட லாகுமோ
ஒருபே ருயினும் உலகமெல் லாம்அறிந்(து)
ஓதிடும் படிசெய்தால் உனைப்பழிப் பாருண்டோ

[4]உம்பர் வாழ்வுற, [5]அஞ்சுமாதவர்
சிந்தைநோவற, வென்று போர்பொரு
கந்த னேயுமை மைந்த னேசிவ
[6]சம்பு பேணிட [7]விஞ்சை யோதிய, கருணாகர

இன்னம் எத்தனைகாலம் அருள்புரிந் தாளாமல்
ஈனமா னிடர்தாமும் இகழல்கண் டிருப்பாயோ
[8]பன்னக சயனனும் சிவனும்போல் வாழ்வுறப்
பண்ணுவேன் என்றுநீ பகர்ந்தசொற் பயனீதோ

பக்தி மிக்கவெொர் [9]பெண்கை நாயகன்
வெட்ட அற்றுவி ழுந்த போதத
னைக்கொ டுக்கவி ரைந்து போய்வரு
மெய்ப்பு கழ்ப்பகர் தொண்டர் பால்மகிழ் கருணாகர

---

7. 1 கருணையே வடிவானவன், 2 திருவண்ணாமலையில் தனக்குச் சொல்லிய அருளுரை. (சுவாமிகளது அநுபவம்). 3 பாண்டி நாட்டுள்ள முருகன் மலைக்கோயில், 4 தேவர்கள் வாழ்வுறவும், 5 கொடிய அசுரர் ஆட்சிக்கஞ்சிய தவசிகள் மனவாதனைதீரவும், 6 சிவன், 7 பிரணவப்பொருள், 8 பாம்பிற் படுத்துள்ள திருமால், 9 முருகம்மையார்,

முப்பொழு தினும்உன்னை நாடவி ரும்புமென்னை
முசுகுந்த நாடகம் மொழியெனப் பகர்ந்தாயே
பொய்ப்பொருள் வாஞ்சையிற் றளர்கின்ற மூடரைப்
போலவ ருந்தவிடல் புண்ணிய மாகுமோ

[10]போத னைச்சிறை வைத்(து)அ வன்றரு
பால ரிற்றலை மைப்பெ ரும்புகழ்
தோய கத்திய னுக்கு மந்திர
தார கப்பொரு ளைப்ப கர்ந்துயர்.

கருணைகரமுருகா—கதிர்வேலவா
கருணைகர முருகா. (7)

## கட்டியக்காரன் வருகை

கட்டியம் கூறல்—புகழ்ந்து பேசுதல் இது கடவுள் சந்நிதியிலும் அரசரது முன்னிலையிலும், அவர்களது புகழைக் கூறுதல். எழுச்சி சொல்லுதல் என்று பொருள்படும். நாடக முதலில் இந்த ஒரு பாத்திரம் வருவது உண்டு அதில் நகைச்சுவைபடப் பேசி மக்களை மகிழ்விக்கும் முறையில் இப்போது அதனைக் கையாளப்படுகிறது. இங்கு எடுத்துக்கொண்ட முறை அவ்வா றில்லை. கயிலையில் கட்டியம் கூறுபவர் நந்தி தேவர். என்ற கருத்தில் விருத்தப் பாடல் உள்ளது. அடுத்த கீர்த்தனையில் சுவாமிகள் தாமே அந் நிலையிலிருந்து நற்கருத்தைக் கூறி விளக்குவது காண்க.

### சிந்து விருத்தம்

மிசிரசாப்பு—தாளம். அம்சத்தொனி ராகம்

மெய்யில் முழுவெண் நீறுபூசி விளங்கும்உருத்தி ராக்கம் பூண்டு
மையில் செம்பட் டாடை சுற்றி வயங்கும்[1]காளை வதனம்கொண்டு
பொய்யில் லாத மொழிகள் பேசிப் புண்ணி யத்தினர் புகழ மகிழ்ந்து
கையிற் பிரம்பும் ஏந்திக் கட்டியக் காரன் வந்துதோன் றினனே. (8)

---

10 பிரமனை.

8. 1 காளைவதனம் – நந்திமுகம். பொய்யிலாத என்பது நாடகபாணி யிற் கூறும் தற்கால நகைக்சுவை மொழியைக் குறிக்கிறது. அவ்வாறு பேசு வதாற் பொது மக்களே மகிழ்வர். இங்குக் கூறும் கட்டியம் புண்ணிய முடையவரே மகிழ்வரென்று சிறப்பித்ததறிக. கையிற் பிரம்பு–நந்திதேவருக் குரியது. ‘வேத்திரப்படையால் தாக்கி’ நந்திதேவர் துதி.

சங்கராபரணம்–ராகம்] கீர்த்தனை [தாளம்–ஆதி

கட்டியக் காரன்நானே—கயிலைமலைக்
கட்டியக் காரன்நானே,

அநுபல்லவி

குட்டிக் கொண்டுகண பதிசந்நி தானத்திற்
கும்பிட்டுத் துதியாத வம்பர்களைப்புடைக்கும் கட்டிய

சரணம்

வேலும்ம யிலுந்துணை யென்றுதி னமுஞ்சொல்லி
[1]வெற்பினந் தோறும்போய் விமலசண் முகன்இரு
காலும்தண் டையுமிகக் கருதிக் கருதித்தமிழ்க்
கவிகொடு துதியாரைப் புவியில்ந டுங்கச்செய்யும். கட்டிய

[2]பிஞ்சு மதியணிந்த சடையுடை யானையும்
பெருமலை [3]யரசுமுன் பெறும்உமை யாளையும்
[4]அஞ்சுபொ றியின்உரு வேற்றித்தி னமும்நினைத்(து)
ஆனந்தம்அடையாரை ஈனம்ப டப்புரியும், கட்டிய

[5]அட்ட மூர்த்திவடி வாய்உல கனைத்தையும்
அறிந்துகொண் டடியவர்க் கடிமைசெய் தநுதினம்
இட்டம்உற் றவர்பதத் துகள்சிரத் தினிலணிந்(து)
[6]என்னையும் மறந்தன்பால் நன்னயக் கூத்தாடும்
கட்டியக்காரனானே. (9)

பாயிரம் முற்றிற்று

---

9. 1 மலைகள், 2 இளம்பிறை, 3 பருவத அரசன், 4 ஐந்தெழுத்து, 5 இறைவனது எட்டு வடிவம். அவை மண், நீர், தீ, காற்று. வெளி, சந்திரன், சூரியன், உயிர், என்பவை. 6 தற்போதமற்றுச் சிவவுணர்வாயிருக்கும் ஆனந்தமேலீடு.

# நூல்

## விருத்தம்

கயிலைமலைத் தலையில்வளர் சிவபி ரானும்
கவுரியும்பே ரானந்தக் கடலின்மூழ்கி
அயிலணிகைக் குழந்தையும்பல் கிரிகள்தோறும்
ஆடல் செய்யப் போந்ததியில் ஆருமின்றிக்
[1]குயிலியமா மணிக்கனக மண்டபத்தின்
கொலுநீத்தோர் நந்தனத்திற் குறுகி, ஆங்கு
[2]வெயிலவனும் பனிமதியும் சேந்தாற்போல்ஓர்
வில்வமரத் திருநிழலில் மேவினரே. (1)

## கொலுக்கீர்த்தனை

ராகம்-தோடி] [தாளம்-ஆதி

### பல்லவி

வில்வத் தருநிழலிற் சிவனும்உமையும்[1] ஒன்ருய்
மேவியி ருந்தனரே சந்தோடமாக மேவி

### அநுபல்லவி

செல்வம் மலியுலகில் சீவரெல் லாங்கலந்து
திசைமுகப் பிரமன்கைச் சிருட்டி நடக்கும்படி வில்வ

### சரணங்கள்

பூவே றியதிரு மகளைமால் பிரியாமல்
புனிதக் கலைமகளைப் [2]போதன்விட் டகலாமல்
தேவேந் திரன்[3] அயி ராணியை வெறுக்காமல்
தேவரெல் லோர்க்கும் இன்பத் தேன்சுவை கசக்காமல் வில்வ

அருந்தவர் விரதங்கள் கருதிப் பயன்கொடுக்க
அந்தணர் முதலானோர் அறங்களெல் லாம்பெருக்கத்
திருந்திய நான்மறைச் சமயம்[4]ஒ ராறும் உய்யத்
தீயவர் யாவரும் திடுக்குறும் படிசெய்ய வில்வ

---

1. 1 செய்தமைக்கப்பெற்ற நவமணிப்பொன் மண்டபத்தின்.
2 சூரியனும், சந்திரனும்.

2. 1 சிவமும் சத்தியும் வேறு வேருயிருப்பின் ஐந்தொழில் நடவாது எனவே, ஒருமித்த நிலையில் காட்சி தந்தனர். 2 பிரமதேவன். 3 இந்திராணி, 4 சௌரம், சைவம், சாத்தேயம், வைணவம், காணபத்தியம், கௌமாரம் என்பன. இவை வைதிக சமயம் ஆறென்ப.

சத்தியும் சிவமும்ஒன் றென்றசொல் மெய்யாகச்
சமரசம் அறியாத சழக்கர்சொல் பொய்யாகச்
சித்தியும் முத்தியும் செழிப்புறும் படிநோக்கித்
திருவருள் ஆனந்தச் சின்மயத் திடைதேக்கி

வில்வத் தருநிழலிற் சிவனும் உமையுமொன்ருய்
மேவியிருந்தனரே. (2)

விருத்தம்

அப்படியாங் கவரிருக்கும் போதோர்மந்தி
அம்மரத்தின் இலைகள்பறித் தனந்தமாகக்
[1]கைப்பழக்கச் சேட்டையினல் மீதுபோடக்
கவுரி[2]சினஞ் சிறிதுகொண்டாள், கருணைமூர்த்தி
இப்படிச்செய் ததற்காகச் சினந்தோமானல்
இசைமுழுதும் குன்ருதோ என்று சொல்லிச்
செப்பமுறப் புவிமுழுதோர் குடைக்கீழ்ஆளச்
செல்லென்ருன் அதுமறுத்துச் சொல்லுமன்றே. (3)

## அரசினை இகழ்ந்த கீர்த்தனை

ராகம்—கரகரப்பிரியா] [தாளம்—தி. சாப்பு

பல்லவி

அரசுசெய் வதுவேண்டாம் நின்சந்நிதி
அதிலிருந் தாற்போதும்.

அநுபல்லவி

புரதக னஞ்செய்தெல் லோரையும் காத்தருள்
புண்ணிய மூர்த்தியே மண்ணினிற் பிறந்துநான் அரசு

சரணங்கள்

ஈனக்கு ரங்குப்புத்தி போயுன்றன் கருணையின்
இயற்கை அறிந்தநன்மை எளிதென்று சொல்லப்போமோ
[1]பானலங் கண்ணுமை யோடுன்னைக் கண்ணுரப்
பார்த்தபெ ரும்பயனைப் பார்க்கிலும்அதுமேலா அரசு

---

3. 1 சேட்டை—குரங்கின் இயல்பான செயல், 2 தனித்திருந்து அற மொழி வினவும் சமயம் இடையூருக இருந்தது குரங்கின் செயல். எனவே, சினம் என்னுமல் சிறிது சினம் என்றனர். அந்தச் சிறு சினமும் நல்லதாக ஏற் பட்டது என்க, இயல்பாகத்தாயுள்ளத்தில் சினம் வராது. வந்தால் சிறிதே வரும் என்பதும் அதுவும் நன்மை ஆம் என்பதும் அறிக.

4. 1 நீலோற்பல மலர்போன்ற.

செங்கோல் செலுத்திடில் தீயவர் வசையுண்டாம்
தீமைகள் செய்திடில் சிறந்தோர் பகையுண்டாம்
எங்கே யாவர்செய் பாவபுண் ணியங்கட்கும்
ஈடாக்கிப் பாவமிஞ் சிடில்நர கிடைதள்ளும் அரசு

அங்கே வாழ்கின்ற அரசரைப் பார்க்கிலும்
அன்புட னேயுன்னை அநுதினம் சேவைசெய்(து)
இங்கே ஊர்கின்ற எறும்புப் பிறப்பும்நன்றென்(று)
யானறிந் தேன்எனக் கெழுகடல் உடுத்தபார் அரசு

[2]நெய்யைத் திருடவந்த எலிக்கன் றரசளித்த
நெடும்புகழ்க் கொருதுணை நேடிச்சொல் இன்ருயோ
மெய்யைப் பிடித்துக்கொண்டு நீதி செலுத்திஞலும்
வீணே [3]அபவாதம் விளைந்திடுந் தெழிலான (4)

அரசுசெய் வதுவேண்டாம் நின்சந்நிதி
அதிலிருந் தாற்போதும்.

விருத்தம்

என்றுரைத்தல் கேட்டும்அரன் நம்சொற்பொய்யா(து)
ஏகென்ருன், மறுப்பதஞ்சி என்றற்கிங்கே
இன்றுநடந் தனமறவா திருக்கவேண்டும், இம்முகமும்
வேண்டுமென்ற(து) ஈந்தேனென்ருன்
அன்றுலகில் மாந்தாதா என்னும்வேந்த
னதுமனையாள் வயிற்றிலுற்(று) ஈரைந்துதிங்கள்
சென்றுமக வாய்ப்பிறந்த(து) அடையாளத்தால்
சீர்த்த[1]முசு குந்தனெனச் செப்பினுரே. (5)

**முசுகுந்தன் வளர்ந்த கீர்த்தனை**

ராகம்–சகாளு] [தாளம்–ஆதி

பல்லவி

முசுகுந்தன் வளர்ந்தானே உலகமுய்ய
முசுகுந்தன் வளர்ந்தானே.

---

2 மகாபலிச் சக்கரவர்த்தி இறைவன்சந்நிதியில் திருவிளக்கின் ஒளிகுன்றிய சமயம் நெய்யைத் திருடி நக்கிய முகத்தால் திரி தூண்டப்பட்டு ஒளி செய்தது. எனவே இறைவன் அரசுரிமையை நல்கிஞரென்பது வரலாறு. எலி செய்ததும், குரங்கு செய்ததும் பயனறிந்து செய்யவில்லை. எனினும் கருணையுள்ளம் நற்பயன் தந்தது. 3 பழிச்சொல்.

5. 1 குழந்தைப்பருவமுதலே குரங்கின் முகம் முற்பிறவியில் கேட்ட வரப்படி அமைந்தது. முசு–குரங்கு, குந்தம்–கைவேல் (ஈட்டி).

### அநுபல்லவி

பசுமுதல் உயிர்களும் பார்க்கத் தினமும்வரும்
[1]பரிதிதன் குலத்தினர் பரிக்கும் அயோத்தியில் முசுகுந்

### சரணங்கள்

அம்ப ரீடன்முதல் ஆனசகோதரரும்
அசுரரும் பற்பல அரசரும் வருந்துறக்
கும்பமு னிவன்முதல்ஆனபெ ரியோர்களுங்
கோதில்விண் ணோரும்அவர் கோனும்உள் மகிழ்ந்திட முசு

அசத்தியம் பாவம்[2]ஒப் பாவதெல் லாம்நடுங்க
அறமும்சத் தியமுமுன்[3] ஆவதெல் லாம்துலங்க
உசத்திய தாந்தெய்வ பத்தியும் தவஞ்செய்யும்
உரமும்மெய் ஞானமும் உடன்வளரும்படி முசுகுந்தன்

கல்வியும் வீரமுங் கருணையும் பெருகிடக்
[4]காசினி மடந்தையுள் களிப்புடன் உருகிடச்
[5]செல்விதன் கோன்அலுப் பாறலாம்என்று துள்ளச்
சிவபெரு மான்வரம் சென்னியிற் சுமந்துள்ள
முசுகுந்தன் வளர்ந்தானே (6)

### விருத்தம்

வளர்ந்தமுசு குந்தன்ஒரே குடையி னிற்பார்
முழுதாளும் வாஞ்சை கொண்டு
கிளர்ந்தவடி வேலனருள் கிடைக்கில் நன்றென்
றுளந்தேறிக், கேடில்[1]சீலம்
அளந்தறையொண் ணுவசிட்ட
மாமுனிவன் ஆச்சிரமத் தணுகிப் போற்றி
இளங்குமரற் கானவிர தங்க ளெல்லாம்
யானறிய இயம்பென்றனே. (7)

---

6. 1 சூரிய வம்சம். சோழ பரம்பரை சூரியன் மரபும், பாண்டிய பரம்பரை சந்திரன் மரபும் ஆகும். 2 களவு, சூது, கொலை, காம முதலியன. 3 ஒழுக்கம், கல்வி, ஆசாரம், ஞாயம், அன்பு முதலியன. 4 பூமிதேவி, தருமம் செழிப்பதால் பூமி தேவி மகிழ்தல், 5 திருமகள் கணவனை திருமாலுக்கு ஓய்வு எய்துவது. அநீதி மறைதல்பற்றி என்க.

7. 1 தவமுதலியவற்றை இவளவென்று கூறமுடியாத அளவு கூடியவர் என்பதாம்.

## வசிட்டர் கீர்த்தனை

ராகம்- பைரவி] [தாளம்-ஏகம்

பல்லவி

வசிட்டர் பெருமைசொல்ல
வல்லவர் யாரே—

அநுபல்லவி

விசித்திரஞ்சேர் [1]விசுவா—மித்திரரே அறிவார் வசிட்டர்

சரணங்கள்

அம்புயப் பூவில்வளர் [2]ஆரணன் அருளாலே
[3]கும்ப முனிவனுடன்—கூடப்பிறந்துவந்த வசிட்டர்

சீராம ஞகிய திருநெடு மாலுக்குந்
தாராள மாகஞான[4]தத்துவம் போதித்த வசிட்டர்

அக்கினி மனைவியும் அருமையென் றேங்கிடத்
தக்ககற் புறும்[5] அருந் ததியுடன் வாழ்கின்ற வசிட்டர்

[6]வேதவி யாசர்தந்தை விரும்பித்தன் பாட்டனென்று
பாதம்வ ணங்கல்முதற் பலபுகழ் படைத்துள்ள
வசிட்டர் பெருமைசொல்ல
வல்லவர்யாரே. (8)

விருத்தம்

அந்தமா முனிவன்முசு குந்தன் றன்னை
அருட்கண்ணுற் பார்த்தாசீர் வதித்திப்பாலன்
கந்தவேள் பெருமையறிந் திட்டதென்ன
காரணமென் றதிசயித்துக், கயிலைநாதன்
தந்ததோர் வரத்தினது மகிமையென்னத்
தன்னறிவால் அறிந்து,முறை தவருதென்பால்
வந்தநீ மகிழ்வுறச்சொல் கின்றேன் காதால்
வாங்கென்றுன் மனத்தில்நன்ருத் தாங்கென்ருனே (9)

---

8. 1 விசுவாமித்திரர் வசிட்டரது சீடர். கௌசிக மன்னனுயிருந்த இவர் வசிட்டரிடம் போரிட்டு அவரது யோகதண்ட வலிமையறிந்து தவத்தை மேற்கொண்டனர் என்பதாம். விவரம் மேலும் பிற நூலால் அறிக, 2 தாமரைப் பூவில் உள்ள பிரமன், 3 அகத்தியர், 4 வாசிட்ட நூல், 5 அக்கினியின் மனைவி மற்ற ஆறு முனிவர் மனைவி உருவமெடுத்தபோது, வசிட்டர் மனைவியான அருந்ததி உருவமெடுக்க முடியவில்லை. எனவே, தக்க கற்பு என்ருர். மற்றவர் கற்பு தாழ்வென்பதல்ல. அவையனைத்துள்ளும் மேலென்பதாம், 6 வியாசர் தந்தை பராசரர், அவர் தந்தை சத்தி. அவர் தந்தை வசிட்டர். எனவே பராசரர் பாட்டனென்ற தகுதி பெற்றவர் வசிட்டர் என்ருர்.

## கந்தவிரதக் கீர்த்தனை

ராகம்–பியாகடை] [திசிரசாப்பு–தாளம்

பல்லவி

கந்த விரதஞ்சொல்லக் கேளாய் — முசு
குந்தனென் றிடும்பெய ராளா.

அநுபல்லவி

முந்தப்ப கீரதன் சுக்கிரன் சொற்படி
மூன்று வருடமவன் [1] ஆன்ற கிழமைதனில்
சிந்தனை செய்தயி லாற்பகை நீங்கியிச்
செகமுழு தாண்டுமெய்ப் புகழுடம் போடுற்றான். கந்த

சரணங்கள்

கார்த்திகை விரதத்தைக் கணபதி சொற்படி
கானநா ரதன்கொண்டு மேன்மை மிகவுமுற்றான்
[2] வார்த்திக வேதியர் இருவர்அவ் விரதத்தால்
மநுவுந் திரிசங்கு மன்னனும் ஆகினர்
[3] ஆர்த்திகொள் மற்றொரு மன்னனும் வேடனும்
அதுகொண்ட தால்அந்தி மான்சந்தி மானெனும்
சீர்த்திபெற் றார்அந்த விரதத்தின் மகிமையைச்
செப்பவென் றால்ஆதி சேடனால் முடியுமோ. கந்த

ஐப்பசி மாதத்தின் [4] சுக்கிலபட்சத்தில்
[5] ஆதிப் பகல்முதலாய் ஆறுநாள்அளவிலும்
[6] துய்ப்பதொன் றில்லாமல் [7] சுத்தநீர் அதனையே
தொடுத்துமுக் கால்[8] ஒரு தூயகை யாலுண்டு
நெய்ப்படு மோதகம் ஆதிநிவேதனம்
நிறைத்துக்[9] கும் பவிம்பங்கள் நிறுத்திப்பூ சனைசெய்திட்டு
எய்ப்பகன்று இந்திரன் ஆதிய தேவர்முன்
இழந்தபொன் னூரிற்போய்இன்பமுற் றிருந்தார்கள் கந்த

---

10. 1 வெள்ளிக்கிழமை–இது முருகனுக்குரியது என்பதை,
"எள்ளரும் சிறப்பின்மிக்க எழுவகை வாரந்தன்னில்
வெள்ளிநாள் விரதமொன்றே விண்ணவருலகங்காத்த
வள்ளல்தன் விரதமாகும்". என்றதைக் கந்தவிரதப்படலத்தாலறிக,
2 வயது முதிர்ந்த, 3 மகிழ்ச்சி, 4 வளர்மதிக்காலம், 5 அமாவாசை கழிந்த முதல் நாள், 6 உண்பது, 7 வெறும் தண்ணீர், 8 இரண்டு கையாலும் அள்ளிப் பருகலாகாதென்பதை வலியுறுத்தி ஒரு தூய கை என்றார். தூய என்பதால் வலது கை என்றறிக. 9 கலசம், மூர்த்தி இவற்றால் வழிபடுதல்.

புகன்ற விரதம்ஒரு [10]மூன்றுக்கும்முன்பின்னில்
பொருந்தும்நாள் களில்ஒரு போதன்னம்உணவேண்டும்
திகழ்ந்தஆசாரமும் நித்திய கருமமும்
சிதையாமற் செயவேண்டும், திருப்புகழ்ச் சரித்திரம்
பகர்ந்த புராணங்கள் கேட்டு மகிழவேண்டும்
பத்தர்கள் பலருடன் பாரணை செயும்நாளிற்
சுகந்தரும் என்றெண்ணிப் பகலில்அணுவளவும்
தூங்கா திருக்கவேண்டும் துகளில்முன் னூல்சொன்ன
கந்த விரதஞ் சொல்லக்கேளாய் — முசு
குந்தனென் றிடும்பெய ராளா, (10)

விருத்தம்

என்றுமுனி சொன்னவிதிக் கிசைந்துமுசு குந்தனென்பான்
அன்றுதொட்டவ் விரதங்கள் அநுட்டித்தான் நெடுநாளாய்க்
குன்றுதொறும் கூத்தாடும் குகப்பெருமான் மயிலேறித்
துன்றுபல தேவரொடும் தொண்டரொடும் தோன்றினனே. (11)

காட்சிக் கீர்த்தனை

இராகம்-கமாஸ்] [தாளம்-ஏகம்

பல்லவி

கந்தன்முசு குந்த னுக்குக் காட்சி கொடுத்தான்—அவன்
கண்டுதெண்ட னிட்டிரண்டு கையும் எடுத்தான்

அநுபல்லவி

[1]அந்தரத்துத் தேவர்களும் அருள்பெற்ற மாதவரும்
வெந்தகைப்பல் பூதர்களும் வீரர்களும் சூழவந்து கந்தன்

சரணங்கள்

ஆறுவ தனங்களும் ஆறிரண்டு தோள்களும்[2]மேல்
ஏறும்ஆ யுதங்களும் எழிற்சத்தி வேலும்நிலை
மாறுப டாதஇரு மங்கையர்கள் பங்கும்மறை
கூறுபத முந்துலங்தக் கோலா கலச்சிகியிற் கந்தன்

இந்திரன் றனக்குமுன் னெழில் [3]மகுடந்தரித்து
மந்திர வேதனுக்கு மதமறத் [4]தளையிட்டுச்

10 தாம் கருதிய இடர் நீங்கி நலம் பெருகினர்கள். இது சட்டி விரதத்தின் முறை கூறியவாறும். 11 கிழமையில் வெள்ளி, நட்சத்திரத்தில் கிருத்திகை, திதியில் சட்டி, ஆக மூன்று. இவை முருகனுக்குரிய 3 விரத நாட்கள் என்க.

12. 1 ஆகாயவாசிகள், 2 கடவுளர் தரித்துள்ள ஆயுதங்கள் மேல் நோக்கியவண்ணமிருக்கும், 3 முடிசூடுதல், 4 கால்விலங்கு,

செந்திரு நாதனுக்குத் [5]திகிரிப் படையளித்துச்
சந்திர சேகரற்குத் தாரகப் [6]பொருள்சொன்ன கந்தன்

பத்திஉத் தமமென்று பகர்ந்தவே தம்களிக்க
முத்தி விரும்புந்தவ முனிவர்க்கின் பம் துளிக்கச்
சத்துவ குணமற்ற தானவர் [7]தத்தளிக்கக்
கத்துதிரைப் பார்மடந்தை கவலையெல் லாம்ஒளிக்கக்

கந்தன்முசு குந்த னுக்குக் காட்சி கொடுத்தான்
கண்டுதெண்ட னிட்டிரண்டு கையும் எடுத்தான். (12)

### விருத்தம்

காட்சிதந்த குகனைமுசு குந்தன்அன்பிற்
பணிந்துமிகக் களித்தான், அன்னோன்
மாட்சியுறும் நின்தவத்தால் மகிழ்வுற்றேன்
நீவிரும்பும் வரம்யா தென்முன்
ஆட்சியிந்த உலகமுற்றுஞ் செலுத்தநினைத்
தேன்அதற்குன் அடியே போற்றும்
தோட்சிலைவீ ரரையெனக்குத் துணையாகத்
தருதியெனச் சொன்னன் அன்றே. (13)

## வரங்கேட்ட கீர்த்தனை

இராகம்–ஆனந்தபைரவி] [தாளம்–தி. சாப்பு.

### பல்லவி

என்றனக் குத்துணை யாகநின் வீரரை
ஈந்தருள் புரிவாயே.

### அநுபல்லவி

குன்றமெங்கெங் கணுஞ் சென்றுசென் றுடிடும்
குமர குருபரனே அமரர்சகாயனே. என்றன

### சரணங்கள்

பசுவும் புலியும்ஒரு துறையில்தண் ணீர்குடிக்கப்
பாவம் அடங்கித் தர்மம் பலவும் மிகப்பெருக்கச்

---

5 திருமாலுக்குத் தாருகனிடமிருந்த சக்கரப்படையை மீட்டுத்தந்தது, 6 பிரணவப் பொருள், சந்திரசேகரன்–சந்திரனையணிந்த சிவன், 7 தங்கள் அநீதச் செயல் இனி நடத்த முடியாதென்று அசுரர் வருந்தினர். அதற்குப்பதில் பூமிதேவி நல்லறம் செழிக்குமெனத் துயர்நீங்கினள் என்றூர். கத்துதிரைப்பார்–அலைமுழங்கும் கடல்சூழ்ந்த பூமிதேவி.

[1]சசியணிந் தம்பிகை வலத்தில் இருக்கத்தக்க
சங்கரன் ஆதியில் தந்தவ ரம்பலிக்க — என்றனக்கு

அற்பமன் னருந்தமக் கானபடி துள்ளாமல்
அன்பரை வன்பர்கள் அடக்கிவே லைகொள்ளாமல்
நற்பெரி யோர்களைப் புல்லர்ந கைத்தெள்ளாமல்
நான்செய்ய வேண்டினேன் நவில்சொல்லைத் தள்ளாமல்
என்றனக்கு

தந்தைவல் அவுணர்க்கும் வரங்கொடுத் திடும்[2]பீடும்
தன்மாமன் உலகெல்லாம் தாங்கி அளிக்கும்ஈடும்
நிந்தையிலா அன்னை அறம்வளர்ப் பதும்நீடும்
நிசமானல் எந்நாளும் நின்னரு ளையேநாடும்

என்றனக் குத்துணை யாகநின் வீரரை
ஈந்தருள் புரிவாயே. (14)

விருத்தம்

இந்தவரங் கேட்டமுசு குந்தற் கப்போ(து)
ஈந்தனமென் றயிற்குகவேள் இசைத்தான் விண்ணோர்
எந்தவரங் கேட்டாலுங் கொடுக்குமீசன்
ஈன்றமைந்தற்(கு) ஈதழகேயென்று சொன்னார்
அந்தநி மிடத்திலடல் வீரவாகு
ஆதியர்க்கப் படிச்செயுமா றறைந்தான் அன்னோர்
நொந்தமனத் தினராகி மறுத்தேதோ
நுவல்கின்றார் சிறுமையெண்ணிக் கவல்கின்றாரே. (15)

நவவீரர் மறுத்த கீர்த்தனை

ராகம்-முகாரி] [தாளம்-ஏகம்

பல்லவி

உன்னைத் தொழும் நாங்கள்—இந்நாள் இந்த
மன்னனைச் சார்வோ மோ.

அநுபல்லவி

என்ன வரங்கொடுத்து எங்களைத் தாழ்த்தினை
இரவி குலத்தில்வரும் இவனையோ சேவிப்போம் உன்

---

14. சந்திரன், 2 பெருமை-தந்தை சிவன், மாமன் திருமால், அன்னை உமையவள்.

### சரணங்கள்

சூரனு டனேவரும் தொல்லை அசுரரெதிர்
வீரஞ்செய் ததையெண்ணில் வெட்கமா யிருக்காதோ
ஆரணன் நாரணன் அறிவரும் சிவன்தந்த
காரணத் துணையாம்எங் களைஅங்கே விடலாமோ. உன்னை

கருணைச்சண் முகங்களும் கரங்களோர் பனிரண்டும்
[1] அருணநி றமும்நாடி ஆனந்தம் ஆதல்போய்
[2] குருளைக் கருங்குரங்கின் கோர முகனைநாடிப்
பெருமைகுன் றிடச்சொன்னாய் பிழைசெய்த தில்லையே
உன்னை

தந்தையும் மகிழ்வுறத் தாரகப் பொருள்சொன்ன
விந்தைக் குருபரனே வேற்படைத் தெய்வமே
சிந்தையில் என்றும்நின் திருவடி கருதியும்
நிந்தை மனிதர்குல நிருபனைச் சேவியோம்.

உன்னைத் தொழும் நாங்கள் (16)

### விருத்தம்

அங்கவர்சொற் கேட்டகுகப் பெருமானென்றன்
அருகுறும் உங் களினுமிகும் அன்ப னும்இத்
துங்கமன்னற் கீந்தவுண்மை வரத்தை மாற்றச்
சொன்னதனுல் நீங்கள் இந்தச் சொருபம் மாறித்
[1] தங்கண்இமைத் திடுமனித ராய்ப்போய் வாழ்ந்து
தவத்தாற்பின் நம்முலகிற் சார்வீ ரென்று
வெங்கனற்கோ பத்தினன்போன் ருெருநன் னீதி
விதித்திட்டான் அவர்கள்அஞ்சித் துதித்திட்டாரே. (17)

## நவவீரர் தோத்திரக் கீர்த்தனை

இராகம்—மாஞ்சி] [தாளம்—ஏகம்

### பல்லவி

எங்கள் பிழைபொறுக் கொண் ணுதா — மலை
யிடந்தோறும் நடிக்கும் பொற் பாதா.

---

16. 1 செந்நிறம், 2 குட்டி.

17. 1 கண் இமைப்பது தேவர்களினத்துக்கில்லை, மனிதர்களுக் குண்டு. நவவீரர்களை—மனித இனமாக மாற்றினர் முருகன்.

அநுபல்லவி

துங்கத் தேவர் உருப் போச்சே — என்பும்
தோலுங்கொளும் உருஉண் டாச்சே. எங்கள்

சரணங்கள்

இன்னம்எப் படிவிடு வாயோ—அழைத்(து)
எங்கள் நிலையினில்வைப் பாயோ
முன்னம் கொடுத்தவரம் பொய்யா — வம்பில்
மோசம் போனேம் இரங் கையா. எங்கள்

ஈனப் பழவினைபொல் லாதே — இன்னம்
ஏதேனும் சாபஞ்சொல் லாதே
மானத்தி னைக்கருதி யேயோ — இங்கு
மனிதர்கள் ஆக்கிவிட் டாயோ. எங்கள்

முசுகுந்தன் செயுந்தவம் நன்றே — நாங்கள்
முன்செயும் தவமொப்ப தன்றே
[1]பசுபதி புகழுங்கு மாரா — தமிழ்ப்
[1]பனுவலொக் குங்கடம் பாரா.

எங்கள் பிழைபொறுக்கொண் ணுதா. (18)

விருத்தம்

இப்படித்தோத் திரம்புரிந்த வீரரெல்லாம்
இந்தமட்டிற் பிழைத்தோமே யாஞ்செய்திட்ட
தப்பதற்குக் கருக்குழியில் வீழாதென்னும்
சந்தோடம்பெரிதுகொண்டுஅத் [1]தார்வேந் தன்றன்
கைப்படைபோற் றிடற்கிசைந்தார் கந்தநாதன்
கலபமயிற் பரியோடும் கதிர்வேலோடும்
மைப்பருமா மலைக்குலம்நேர் பூதரோடும்
மறைந்திட்டான் வெளிமுழுதும் நிறைந்திட்டானே (19)

## வத்து நிச்சயக் கீர்த்தனை

இராகம்–சுருட்டி] [தாளம்–திசிரஏகம்

பல்லவி

கந்தன் வசிக்குந்தலம் இத்தலமேயென்று
கணித்துச் சொல்லிடப் போமோ.

---

18. 1 பசு–உயிர், பதி, இறைவன். பசுபதி–உயிர்கட்குத் தலைவன் (சிவபிரான்) 2 பனுவல்–தமிழ்நூல்.

19. 1 வெற்றி மாலை சூடிய முசுகுந்தன்.

அநுபல்லவி

அந்தர முதலான பூதமைந் தினிலுமோ
ஆதித்தன் நடுவிலோ அம்புலி நடுவிலோ. கந்தன்

சரணங்கள்

வேதத்தின் முதலிலோ நடுவிலோ முடிவிலோ
வெற்பினங் களிலேயோ மெய்யடியார் உண்மைப்
போதத்தி லோவிந்து நாதத்தி லோபரி
பூரணத் தொடுமுதற் காரண மாகிய. கந்தன்

காலதத் துவத்திலோ கன்மத்தின் நிலேயிலோ
கண்ணுத லானருட் கடற்பெரும் பெருக்கிலோ
மாலவன் தொழிலிலோ நான்முகன் விதித்துள்ள
மதங்களோர் ஆறிலோ சுதந்தர லீலேசெய். கந்தன்

கவுரிதன் கையிலோ கந்தமா தனத்திலோ
கங்கையி லோவிரு மங்கையர் இடையிலோ
பவுரிசெய் திடுமயில் ஆடுவெள் ளானேயிலோ
பத்தியி லோசித்தி முத்தியிலோ எங்கள்

கந்தன் வசிக்குந்தலம் இத்தல மேயென்று
கணித்துச்சொல் லிடப்போமோ. (20)

விருத்தம்

அத்தகைய கந்தனருள் பெற்றிடில்
யாதரிதாகும் ஆதலாலே
[1]நெய்த்தமலர்த் தாரணிதோள்
முசுகுந்தன் எனும்வேந்தன் நெடுவாளேந்தும்
கைத்தலத்தோ ராம்இலக்கத் தொன்பதுவீ
ரருஞ்சூழ்ந்து காக்கும் பெட்பால்
இத்தரைமன் னவரையெல்லாம் வென்று[2]சக்க
ரேச்சுரனென் றிலங்கினனே. (21)

அரசாட்சிக் கீர்த்தனே

ராகம்–சங்கராபரணம்] [தாளம்–ஆதி

பல்லவி

சக்கர வர்த்தியாய் முசுகுந்த னெனுமன்னன்
தரைமுழு தாண்டானே.

21. 1 தேனேடுகூடியமலர், 2 சக்கராதிபதி (பேரரசன்)

### அநுபல்லவி

[1]செக்கரும் முகிலும்போல் வில்வ மரநிழலிற்
சிவன் உமை யவளுடன் சேர்ந்துசொல் லியபடி சக்கர

### சரணங்கள்

உத்தம வேந்தர்கள் கொள்ளும் பகுதியாறில்
ஒன்று கொடுக்கக் கொண்டு
தத்தங் குடிகள்வருந் திடச்செய்யும் அரசர்தம்
தலைகள் உருளக் கண்டு

சித்தம்ஓ ருயிர்க்கிடர் ஒருவரும் செய்யாமல்
சிறந்த கருணை விண்டு
[2]சத்தசு ருதியுடன் ஆகமம் சொல்லும்விதி
தவறு திருக்கப் பண்டு. சக்கர

அந்தணரா மவர் வேதம் படிப்பதைவிட்டு
[3]அயற்றொழில் விரும்பாமல்
செந்தகைச் சத்திரியர் சத்துருக் களுக்கஞ்சிச்
[4]சீயெனத் திரும்பாமல்

தொந்தப்பொருள்வணிகர் வட்டிமிஞ் சாமற்பயிர்த்
தொழி லோர்துன்பரும்பாமல்
நிந்தனைக் [5]குலத்தரும் ஊனருந் தாமல்வென்றி
நீர்நிறை தரும்பாமல். சக்கர

ஆலயம்மடங்கள்சத் திரங்களொப்பாமிடம்
அனைத்தையும் சிறப்பாக்கி
மேலவர் கற்றவர் [6]சற்சனர் ஆதியர்
[7]வெங்கலி அறநீக்கிக்
காலமும்இடமுங்கைப் பொருளும் ஆயுதங்களும்
கருமமும் மிகநோக்கி
[8]ஞாலம டந்தைமகிழ் வுறும்படிபாவமெல்லாம்
நாசப்படவே தாக்கி

சக்கர வர்த்தியாய் முசுகுந்த னெனுமன்னன்
தரைமுழுதாண்டானே. (22)

---

22. செக்கர் சிவனுக்கும், மேகம் உமைக்கும் உவமை. செக்கர் சிவப்பும்–மேகம் கருப்பும் ஆகும். 2 ஏழிசையுள்ள வேதம், 3 ஒருவனிடம் அடங்கிச் செய்யும் தொழில், 4 புறமுதுகு காட்டல் (தோல்வி) 5 இழிகுலத்தோர், 6 நல்லோர், 7 கொடியவறுமை, 8 பூமிதேவி.

### விருத்தம்

சக்கரவர்த் திப்பெருஞ்சீர் முசுகுந்தன்
அயோத்தியைச்[1]சோ தரர்க்கீந்தப்பால்
மிக்கதமிழ்த்தேசத்தில் உறுங்கருவூர்
அலங்கரித்து வீரரோடுற்(று)
எக்கணத்தும் உலகநன்மை கருதியுற்ருன்
அந்நாளில் எழில்வேற் செவ்வேள்
[2]இக்கனைய சொல்அரம்பை மாதர்பலர்
புவியில்உதித் திடச்செய்தானே. (23)

## அரம்பையர் பிறந்த கீர்த்தனை

ராகம்–பிலகரி] [தாளம்–தி சாப்பு

### பல்லவி

அரம்பையர் பிறந்தாரே — அதனுற் பல
அரசர்கள் சிறந்தாரே.

### அநுபல்லவி

வரம்பெறும் முசுகுந்தன் படைக்குத் தலைவராகி
வாய்ந்தவீ ரரையெல்லாம் தோய்ந்து மகிழப் பாரில். அரம்

### சரணங்கள்

முந்தத்தெய் வானையைக் கந்தன் மணந்தநாளின்
முதல்வீர ருதியோர் [1]மொய்ம்பின் அழகைநாடி
அந்தரங் கத்தின்மோகம் கொண்டுநெக் குருகிய
[2]ஆகா மியம்[3]பிரா ரத்துவ ம்ஆனதால் — அரம்

இந்திரன் [4]தம்பியாய் முகுந்தன் இருந்தாற்போலும்
இமையோர்சே னுபதியாய்க் குமரன் அமைந்தாற்போலும்
[5]சந்தனு மனைவியாய்க் கங்கைவந் ததுபோலும்
தரையிற்சென் றவீரர்க்கா நிறைமனி தப்பெண்களாய். அரம்

இமைக்கொட்டி டாக்குணம்ஒன்றைமாத் திரம்நீங்கி
[6]ஏமகும் பங்களைப்போல் இலங்கு தனங்கள்தாங்கி

---

23. 1 சகோதரர்–உடன்பிறந்தவர். 2 கருப்பஞ்சாறு போன்ற.

24. 1 தோள்வலிமை. 2 முன்வினை, 3 அனுபவிக்கும் வினை, 4 உபேந் திரன், 5 பாரதத்தின் முதலாமவன், 6 பொற்குடம்,

அமைக்கும் அயனைப்பலர் புகழ்ந்திட அழகோங்கி
[7] அந்தப் படிபின் அங்கே அடைந்திட வரம்வாங்கி

அரம்பையர் பிறந்தாரே—அதனுற்பல
அரசர்கள் சிறந்தாரே. (24)

விருத்தம்

அம்மகளி ரானபுட்ப கந்தி யாதி
யரைவீர வாகுமுத லானேர்க் கெல்லாம்
மொய்ம்மலர்த்தார் முசுகுந்தன் மணஞ்செய் வித்தான்
மொழிவரும்பல் மதலைகளை முறையிற் பெற்ருர்
[1] செம்மணிநேர் முதல்வீரன் மனைவ யிற்றிற்
சித்திரவல் லியும்அனகன் சனக னென்னும்
[2] கைம்மலைநேர் புதல்வர்களும் பிறந்தார் அந்தக்
கன்னிவளர்ந் [3] திந்திரைபோல் மின்னி ருளே. (25)

## சித்திரவல்லி கீர்த்தனை

ராகம்–கமாஸ்] [தாளம்–தி. சாப்பு

பல்லவி

சித்திர வல்லிவந்தாள்—[1] மதிவதனச்
சித்திர வல்லிவந்தாள்.

அநுபல்லவி

முத்தியின் ஆசையும்விட்டு முருகன்பத் தியிலுற்ற
புத்திவீ ரவாகுவும்புட்பகந் தியும்பெற்ற சித்திர

சரணங்கள்

குஞ்சரத் துணை நிகர் கொங்கைக் குடங்குலுங்க
நஞ்சமும்அமுதும்போல் நளின விழிபிறங்கச்
செஞ்சரண் களிற்புனை சிலம்புமி கஇரங்கப்
[2] பஞ்சபா ணனைச்சூழும் [3] படைகளெல் லாம்வணங்க. சித்திர

[4] அத்தமும் மணிகளும் அமைந்த பணிகள் மின்ன
மெய்த்தவத் தோருளத்தில் வெருட்சி மிகவுமன்ன

---

7 பின் தேவவுலகிற் செல்வதற்கான மொழி.

25. 1 இரத்தினம்போற் சிவப்பு நிறமுடையவர் வீரவாகு, 2 யானை, 3 இலக்குமிதேவி.

26. 1 சந்திரன்போன்ற முகம். 2 ஐங்கணையுடைய மன்மதன், 3 மன்மதன் சேனை மாதர்கள். அவர்கள் வணங்க என்றது அழகு முதலியவை பற்றி 4 பொன்னும் இரத்தினமும்.

முத்தந கைக்கனிவாய் மொழிகள் சிறிதுபன்ன
இத்தரையிற் கண்டோரெல்லாம் யாரோஇம் மங்கையென்ன
சித்திர

அந்தரத் தூர்மடவார் அனைவரும் மனநாண
இந்நிலத் துமின்னார்யாவரும் அடிபேணச்
செந்தகை வீரர்கோன்முன் செய்தவ மென்றுகாணச்
சந்தத்தோள் முசுகுந்தன் தன்னுயி ரெனத்தோண

சித்திர வல்லிவந்தாள்—மதிவதனச்
சித்திர வல்லிவந்தாள். (26)

விருத்தம்

மன்மதனும் போற்றுமெழிற் சித்திரவல்
லியைவீர வாகாம் தந்தை
தன்மணமும் தம்பிமார் மணமுமுன்னல்
முடித்த[1] மன்னன் தனக்கீந் திட்டான்
முன்மணம்தான் செய்துகொள்ளா தவர்மணஞ்செய்
வித்துமகிழ் முசுகுந் தன்றன்
நன்மனச்சீ ராரறிவார் சிவனறிவான்
குகனறிவான் நரர்கா ணாரே. (27)

## கலியாணக் கீர்த்தனை

ராகம்-கலியாணி] [தாளம்-ஆதி

பல்லவி

கலியாணஞ் செய்துகொண்டானே—முசுகுந்த மன்னன்
கலியாணஞ் செய்துகொண்டானே.

அநுபல்லவி

வலியதா னவர்சேனை மெலியப்பொ ருதவீர
வாகுமுன் பெற்றமக ளாகுமோர் கன்னியை

வசிட்ட னுதிய மேலவர் ஆசீர்
வதிக்க ஓர்சுப நாள்விதியாலே கலியாணம்

சரணங்கள்

அந்தணர் முனிவரர் அட்சதை களைப்பெய்ய
ஐம்பத் தாறுதேசத்(து) அரசரும் பணிசெய்யக்

---

27. 1 முசுகுந்தன்.

கந்த மலர்க்குழலார் [1]குரவைமி கத்தொனிக்கக்
காமன் மகிழ்ந்துதன்கைக் கருப்புவில் லைக்[2]குனிக்கக்

கள்ள மின்றிய சித்திர வல்லியுள்
மைய லுஞ்சிறு வெட்கமு மெய்திட
எள்ள ரும்பல கொட்டொலி மல்கிட
வைய மின்பமு றத்தகு திவ்விய— கலியாணம்

கண்டவர் வியக்கும்பொன் மண்டப கூடத்திற்
கதிர்மணி குயிற்றிய முதிர்மணிப் பீடத்தில்
அண்டரும் புகலோம குண்டத்துக் கெதிரினில்
அரசாணி யாதிய விரவிய சதிரினில்

ஆனைமாமுக னைத்துதித்துவி
சாகனார் அரு ளைக்குறித்(து)உமை
பாக னேதிய சொற்றி றப்படு
மாறு லோகமு ழக்க மெச்சிய கலியாணம்

வங்கிசப் பிதிர்களெல் லாங்கடைத் தேறவும்
மனைவியில் லானெனும் வசைமொழி மாறவும்
பொங்கிய மழலைச்சொற் புதல்வருண் டாகவும்
பூங்கணை மன்மதன் புறத்தஞ்சிப் போகவும்

புட்ப கந்திவி டுத்திடு [3]நீரொடு
வெற்றி மொய்ம்பன் அளிக்கவும் நாவலர்
சுற்றி நின்றுது திக்கவும் வானுல
கத்தர் சிந்தைம திக்கவு மேயொரு

கலியாணஞ் செய்துகொண்டானே-முசுகுந்தமன்னன்
கலியாணஞ் செய்துகொண்டானே. (28)

விருத்தம்

அந்தமுசு குந்தன்மனை யாகியசித்
திரவல்லி அருமையாவோர்
பைந்தகைய கிளிவளர்த்தாள் அதனுயர்ச்சி
அறிந்துநமன் பாரிவேட்டாள்
வந்தவன்தூ துவர்கொடுபோய்க் கொடுத்துவிட்டார்
[1]பஞ்சரத்தில் வைகக்காணாள்
[2]இந்தனைய நுதல்வெயர்ப்பப் பலவாறு
புலம்பியழு தேங்கினளே. (29)

---

28. 1 மங்கலநேரத்தில் வாயாலிசைக்கும் ஒலி, 2 வளைக்க, 3 தாரைநீர்.

29. 1 கிளிக்கூண்டு, 2 சந்திரன் போன்ற நெற்றி.

O-1KK…
N68



## சித்திரவல்லி கிளியைத் தேடிப் புலம்பல்

ராகம்—குறிஞ்சி] [தாளம்—தி. சாப்பு

கண்ணிகள்

என்னரு மைத்துனே யாகியவுன்னைவிட் டெப்படிநான்சகிப்பேன்
அன்னமும் பாலும் அருத்திவளர்த்தேன் [1]அயத்தனை யோகிளியே (30)

என்னைம றந்தொளித் தோடிவிட்டாய்சிறு எள்ளளவாயினுமுன்
தன்னைமறக்கும் திறமையில்லாது தயங்குகின் றேன்கிளியே (31)

எந்த மடந்தை கரத்திலிருந்தெனை எண்ணித்தவிக்குதியோ
அந்தரங்கத்தில் வளர்த்தஉரிமை அறிந்திலையோ கிளியே (32)

[1]என்னை வெறுத்தொரு மங்கையிடத்தில் இருந்துவப்பாயாகில்
அன்னையில்அன்னவ ளைக்கொடுவாழ்கைமெய் ஆகுங்கொலோகிளியே. (33)

பூனை பிடித்தது வோஇனத்தூடு புகுந்து மகிழ்ந்தனையோ
ஏனையிடர்எது வந்ததுவோ அறி யேன்ஐயையோ கிளியே (34)

கன்னியர் நெஞ்சு கலங்கிடவிட்டுக் கரந்துவரும் அவற்றை
உன்னினம்ஒப்புக்கொ ளாதெனலோகம் உரைக்கைபொய் யோகிளியே (35)

சேவல் வரைந்த கொடிக்குகன் தன்னருள் சேவகராம் எந்தைமார்
காவல் கடந்திங்கு வந்துனைக் கொண்டு களிப்பவர் ஆர் கிளியே (36)

நானிலத் துள்ள மடந்தையர்உன்மிசை நாட்டம்வைக் கத்துணியார்
வானிடத் துள்ளவ ரேயுனைக்கொண்டு மகிழ்ந்தன ரோகிளியே (37)

இந்தஅரண்மனை யுள்ளுனைக் கைக்கொள எண்ணிப் புகுந்தவன்ஆர்
அந்தத் திருடனென் நாயகன் ஆக்கினைக் கஞ்சில னேகிளியே (38)

கண்டு மகிழ்ந்துன் மழலை மொழிகளைக் காதினிற் கொள்ளினல்லால்
உண்டியும்கைக்கும் உறக்கமும்கைக்கும்மற் றென்றும் செயேன் கிளியே (39)

வாயும் கழுத்தினி ல்ஆரமும்என்றன் மனத்தினில் வைத்துள்ளேன்
நீயும்அவண்ணம்என் கோலமுமஅன்பும் நினைத்தனையோகிளியே (40)

இந்தவுலகைவிட் டியாங்கள் கயிலை இடத்தினிற் போனாலும்
கந்தன் கிளியடி யாரொடு சேர்க்கக் கருதின னேகிளியே (41)

---

30. 1 மறந்தாயோ.
33. 1 என்போல பிறரையும் ஏமாற்றாமலிருப்பாயா.

(library stamp) சென்னை 600 008.

விருத்தம்

இப்படிச்சித் திரவல்லி பலவாறு
புலம்பியழு தேங்கக் கேட்டு
முப்படியுங் காத்தருளுங் முகுந்தனில்லோ
ரெழுத்துயர்ந்த முசுகுந் தன்ருன்
மைப்படியும்கண்ணீரைத் தொடைத்தெடுத்து
மடியில்வைத்து வருந்த வேண்டாம்
எப்படியும் தருவேனென் றிதஞ்சொன்ருன்
அதற்கியைந்த விதஞ்சொன் ஞனே. (42)

## சித்திரவல்லியை அரசன் தேற்றுங் கீர்த்தனை

பல்லவி

காம்போதி

எந்தவி தத்திலுமுன் கிளியைக் கொணர்ந்துன்கையில்
ஈவேன் வருந்தாதே —

அநுபல்லவி

(மின்முடுகு)

இந்தலோகமன்றி எந்தலோகத்திற்போய்
யாவர் கையிடை மேவி வைகினும்
வீரர் வெல்வர்உன் ஆணைமெய்யடி எந்த

சரணங்கள்

என்னரண்மனையுள்வந் துயாவரும்அறியாமல்
எத்தனைபொருள்களோ இருந்தும்உன்உயிர்போலும்
வன்னக் கிளியைக்கொண்டு போனதி ருடன்கையை
வாங்கிடாவிடில் ஓங்குபார்முழு
தாண்டு வாழ்புகழ் மாண்டு போம்நிசம் எந்த

இங்கு திருடிக்கைகண் டுள்ள திருடனைவிட்(டு)
இருந்தால்மற் றெவருக்கும் பெருந்துயர் விளையாதோ
நங்கையர்க் கரசாமுன் தன்னையும் திருடிட
நாடுவான்இதன் மானமாமடி
வீணில்நீயழ லாகுமோ இனி — எந்த

சூரன்நடுங்கமதில் இடித்தவன் பெறவந்தென்
தோள்புணர்ந் திடும்நீயுந் துயரமுற் றிடலாமோ
[1]வாரணப் பிடிநடைச் சித்திர வல்லியே

[2]மஞ்ஞை வாகன அண்ணலாரருள்
என்னுள் வாழ்வது திண்ணம் நீமகிழ்

எந்தவி தத்திலுமுன் கிளியைக்கொ ணர்ந்துன் கையில்
ஈவேன் வருந்தாதே — (43)

### விருத்தம்

தேற்றுமுசு குந்தன்அந்தக் கிளிபோ மாறு
செவ்வேற்கைக் குகனருளால் தெளிந்தப் போதே
கூற்றுவனைப் பொருததனைக் கொணர்மி னென்று
குலவீரர்க் குரைத்தான்அக் கொற்றத் தோளார்
காற்றும்வெட்கப் படையொடுபோய் அவனூர் முற்றும்
கதறியழப் பொருதழித்தார் கருங்க டாவின்
மேற்றுலங்கும் யமனிளைத்து நாண மெய்தி
வியந்திட்டான் மனமிகவும் பயந்திட் டானே (44)

## எமதருமன் வருந்துகின்ற கீர்த்தனை

### பல்லவி

நாதநாமக்கிரியை

மனிதர்க்கித்தனை திறமேது? நம்மினும்வல்ல
வானவர்யா ரோசெய்யுஞ்சூது.

### அநுபல்லவி

தனியாய்நம் தூதரைக்கண் டாலும் நடுநடுங்கிச்
சற்பத்தின் எதிர்ப்பட்ட தவளைபோ லத்தயங்கும் மனிதர்

### சரணங்கள்

நரகத்தீ யும்அவிந்துபோச்சே—எனையிவ்வூரில்
நாரியர்களும் நகலாச்சே
சரபக்கூட் டத்தைக்கொசுக் கூட்டங்கள் போய்ச்சுற்றிச்
சண்டைசெய் துதவிக்கக் கண்டாற்போல் இருக்குதே மனி

இந்திரன் முதற்பகர் தேவர்—இனத்தரல்லர்
இப்படிப் பொருமவர் யாவர்?

---

43. 1 யானைபோலும் நடை, 2 மயில்வாகன முருகன்.

சந்திரசே கரன்குகன் நாராய ணன்முதலோர்
தம்படைவே றுருக்கொண்டு—வம்புசெய் யவந்ததோ மனி

அரக்கர்மு தலோரையுங்கட்டிக்—கொடுவருமென்
ஆண்மை அறிந்தும் இங்குகிட்டிப்
பரக்கப்ப ரக்கவிழித் திடும்படி போர்செய்யும்
பார வீரரிவர் ஆரோஅறிகின்றிலேன்

மனிதர்க்கித் தனைதிற மேது--நம்மினும்
வானவர்யா ரோசெய்யுஞ்சூது. (45)

விருத்தம்

எமராயன் இந்தவண்ணம் வருந்தும் போதில்
இடபவடி வாய்த்தருமம் எதிரே தோன்றிக்
குமரேசன் செயலும்முசு குந்தன் வீறுங்
கொஞ்சுகிளி யொன்றுகவர் கொடும்பா வத்தால்
[1]தமரோடிவ் வருத்தமுற்ற வாறும் கூறச்
சந்தேகம் தெளிந்துவென்றித் தடந்தோள் வீரன்
அமர்தேர்முற் பணிந்தெழுந்தக் கிளியும் பொன்னும்
அளித்திட்டான் துதித்துமனம் களித்திட் டானே. (46)

## எமன் வீரவாகுவைத் துதித்த கீர்த்தனை

பல்லவி

வீரவாகு தேவரேயெனை—விரும்பியாளும் ஐயா

அநுபல்லவி

பாரகத்தின் மானிடர்தம்—படிவங்கொண்டு வந்துற்ற வீர

சரணங்கள்

முன்னொருக்கால் என்மேல்வந்து முறுக்கி யுறுக்கியவா(று)
இன்னம் நினைவில் இருக்குதே ஏன்இப்படிப் போர்செய்தீர். வீர

யான்செய்தது குற்றந்தான் எனக்கோர் சீட்டனுப்பினுல்
வேன்செய்யுங் கிளியினை விடுத்திடு வேனே வெற்றி வீர

என்னையொரு பொருளென் றெண்ணிப் படையெடுத்தீர்
சின்னம னிதரென்று [1]செருச்செய்து சீரழிந்தேன் வீர

முடிபனை முசுகுந்தன் முதிர்தவப் பயனல்க
வடிவமட் டுங்குறைந்து வல்லபங் குறையாத
வீர வாகு தேவ ரேயெனை விரும்பி யாளும்ஐயா. (47)

46. 1 சுற்றத்தோடு. 47. 1 போர்செய்து.

விருத்தம்

என்றியமன் றுதிக்கவிறல் வீர வாகு
எழிற்றரும னெனும்பெயர்காத் திருத்தி நீதான்
இன்றிளங்கிள் ளையைத்திருட லாமோ வென்றிட்(டு)
இளையவரும் படைகளுஞ்சூழ்ந் திடத்தம் மூர்போய்
மின்றிகழ்வேல் முசுகுந்தன் மனைவி யாம்தன்
வியன்மகட்கக் கிளியைநல்கி வேந்தர் கோன்பால்
வென்றியுன தெனச்சொன்னான் அவன்கண் டின்பம்
விரவினன் வியந்துமிகப் பரவி னானே. (48)

## முசுகுந்தன் வீரவாகுவைத் துதித்த கீர்த்தனை

பல்லவி

உம்மாலல் லவோவெற்றி யுற்றேன்—நீர்தாம்
சும்மா எனைப்புகழ்ந்து சொல்வதேன்ஐயா

அநுபல்லவி

எங்களுக் கேமனைவெல்லும்—வீரம்
ஏதுங்கள் மரபுக்கே யெந்நாளுஞ் செல்லும்
சங்கரன் மகனோநான் சொல்லும்—என்னில்
தாழ்ந்தவர் போற்பேசுந் தன்மையேன் நில்லும் உம்மால்

மனிதவ டிவுமென்னுற் கொண்டீர்—சொந்த
மகளையெ னக்களித்து மகிழவுங் கண்டீர்
புனிதச்சண் முகனடித் தொண்டீர்—என்னைப்
போற்றிடத் தக்கவர் புகலுஞ்சொல் விண்டீர் உம்மால்

குகனுமை யெனக்களித் தாலும்—என்னைக்
கும்பிடு வாருடன் கூட்டுவேன் போலும்
புகழத்து ணிந்தீரோ வேலும்—வாளும்
புனைந்துபோய்ப் பொரும்போராற் புவியில்மேன் மேலும்
உம்மால்

தானவச் சூரன்முன் ஏசும்—வீரத்
தலைவர்நீர் புகழிலென் தன்மனங்கூசும்
மானங்காத் தீரேயென் தேசும்—வாழ்வும்
மரகதக் கிளிவந்த வரவன்றோ பேசும்.

உம்மாலல் லவோவெற்றி யுற்றேன். (49)

விருத்தம்

இந்தவண்ண முசுகுந்தன் துதித்தான் வீரர்க்(கு)
இறைவனெல்லாம் நின்றவத்தின் ஏற்ற மென்றான்
செந்தமிழ்த்தென் கருவூரை நினைத்தான் மற்றத்
திசைப்பாலர் களுநடுங்குஞ் செயமிக் கோங்கிற்(று)
அந்தமணிக் கிள்ளைகொண்டாள் சிந்தை தன்னில்
ஆனந்தக் கடல்பெருகிற் றகிலந் தன்னில்
எந்தமதத் தினரும்எள்ளாக் கற்பிற் சோரா(து)
ஏகினாள் கருப்பவதி யாகி னாளே. (50)

## சித்திரவல்லி கருப்பக் கீர்த்தனை

பல்லவி

கருப்பங்கொண்டாளே—சித்திரவல்லி
கருப்பங்கொண்டாளே.

அநுபல்லவி

[1] மருப்பதுமமும்நாளும் மகிழவ ரும்பரிதி
வங்கிசத் தோர்க்கார்வம் பொங்கிடும் படியொரு. கரு

சரணங்கள்

அன்னமும்பாலும்உண் பதனில்அருவருப்பும்
ஆகாத தாம்புளி யதனில்அதிவிருப்பும்
சொன்னச் சிமிழ்முலைக்கண் கறுத்து மிகும்பெருப்பும்
தோயவேமுசு குந்தனன்றுசெய்
தூயமாதவ மென்றிலங்கிய கரு

பாட்டிமச் சினிமுத லாஞ்சிலர் சீராட்டும்
பரிந்துபெற் றாள்.முதற் பலரன்பின் பாராட்டும்
கூட்டுப்பங் காளிபோல் துயில்வரும் போராட்டும்
கூறுதற்கரி தாயசொற்பனம்
மீறுமற்புத மோடுமுற்றிய கரு

சத்தியோர் பங்குடை யாரருள்நோக்கமும்
சரவணக் குருபரன் தன்னருள்ஆக்கமும்
கத்திய கடற்புவி செயுந்தவஊக்கமும்

---

51. 1 வாசனையுள்ள தாமரைப்பூ.

கானநான்மறை ஆகமம்பகர்
சீலமேவிடு காலமுங்கொடு
கருப்பங்கொண்டாளே—சித்திரவல்லி
கருப்பங்கொண்டாளே. (51)

### விருத்தம்

கருப்பமுற்ற மங்கைபலாக் காய்மீ தாசை
கணக்கவுற்ருள் அறிந்துமன்னன் கடிது காமன்
விருப்புமலி கேரளத்துக்(கு) ஒற்றர் தம்மை
விடுத்தான்அந் நாடளிக்கும் வேந்தீந் தில்லான்
பொருப்புறழ்தோள் வீரற்களிற் சிலரைக் கூவிப்
போகவிட்டான் போய்அவர்தாம் பொருத போரால்
நெருப்பில்விழும் புழுப்போல்அங் குள்ளா ரெல்லாம்
நெளித்திட்டா ரிவர்கள்மனங் களித்திட் டாரே. (52)

## மலையாளச்சண்டைக் கீர்த்தனை

### பல்லவி

மலையாள தேசத்தை முசுகுந்தன் வீரர்போய்
வளைந்துபோர் புரிந்தாரே.

### அநுபல்லவி

[1]உலையாத லோபத்தைத் தலையிற்சு மந்தபண்பால்
[2]ஒக்கக்கொ டுத்திட்டாலும் நக்கக்கொ டார்வாழும். மலை

### சரணங்கள்

திக்குவி சயஞ்செய்த நாளிற்பே டிகள்வாழுந்
தேசமென் றிகழ்ந்ததால் மோசம்வந் ததென்றெண்ணிக்
கைக்குத்த குந்தபல ஆயுதங் களைக்கொண்டு
காலன்தூ தரைஅவர் சாலநல் லோரென்றேத. மலை

அதிலோபத் தோர்க்குவரும் தீமையெங் கும்விளங்க
ஆறுபோல் இரத்தம்போய்ப் [3]பாறும் கழுகும்ஆடப்
பதினெட்டுப் பிரிவான நாட்டிலுள் ளனவான
பண்டங்க ளுங்கவர்ந்து கொண்டங்கோர் கொடிக்கட்டி. மலை

---

53. 1 நீக்கமுடியாத, 2 ஒருமிக்க, 3 பருந்து—கழுகு உலவும்படி.

அங்குள்ள மன்னன்நான் செய்தகுற் றத்தைப்பொறுத்(து)
ஆளவேண் டுமென்று தாளில்வி ழுந்துகெஞ்சப்
பொங்குபு கழ்ப்பெரிய மன்னர் தயவால்அற்பப்
புரவல ரைவிட்டாலும் பரவாரென் பதுதோன்ற
மலேயாளதேசத்தை முசுகுந்தன் வீரர்போய்
வளைந்துபோர் புரிந்தாரே. (53)

விருத்தம்

அவ்வீரர் பலாக்காய்கொண் டவளுக் கீந்தார்
அங்கிவர்மன் எனும்பெயர்தாங் கருமைச் சேயை
வெவ்வீரர் பேரனெனப் பெற்றுள் அச்சேய்
விளங்கும் இளவரசாகி மிளிரு நாளில்
எவ்வீரர் களும்பரவு முசுகுந் தன்பால்
இமையவர்கோன் விடுந்தூதன் எய்திப் போற்றிச்
செவ்வீர ரொடுநீயெம் மூர்க்கு வந்து
சேரென்றுன் துயரமுற்றுந் தீரென் றுனே. (54)

## தேவதூதன்சொல் கீர்த்தனை

பல்லவி

எங்களூர்க்கு வாரும்ஐயா—நாங்கள்படும்
இன்னலெல்லாந் தீரும்ஐயா.

அநுபல்லவி

தங்கள்இனத்தொடு வலாசுரன்எனும்பாவி
சதிசெய்கின்றுன்இந்தச் சணமேதேரினிற்றுவீ எங்

சரணங்கள்

கற்பகத் தருக்களின் வளமையுங் குன்றிப்போச்சே
கண்ணு யிரமுள்ளோன் கவலைப்ப டலும்ஆச்சே
சொற்பனத்தில் அவரை யெண்ணினும் பெருமூச்சே
துணைசெய்தாற் புகழெய்தும் சோம்பினுல் வரும்ஏச்சே. எங்

பானுகோ பன்முதலாம் தானவர் களைவென்றே
பண்டுபு கழ்பெறும்உத் தண்டன்அருகில்நின்றே
யானுந்தம் பிமார்களும் செய்யும்ப ணிசொல்என்றே
இறைஞ்சுகின் றுனேயின்னம் என்னசந் தேகமின்றே. எங்

மனிதனென்றும்மைச்சொல்லப் போமோ,சண் முகத்தெய்வம்
வரந்தரப் பெற்றநீர் வந்தாலே நாங்கள்உய்வம்

பனிமொழிஅ ரம்பையரோ(டு) எத்தனை நாள்நைவம்
பாதுகாத் திடில்ஏன்ற பதில்உப காரம்செய்வம்.

எங்களூர்க்கு வாரும்ஐயா—நாங்கள்படும்
இன்னலெல்லாந் தீரும்ஐயா. (55)

### விருத்தம்

[1]மகபதிதன் தூதனிந்த வாறு சொல்ல
மகிழ்ந்துமுசு குந்தனுடன் வாகைத் தோளாற்(கு)
[2]இகலடப்போம் சம்மதஞ்சொற் றரண்ம னைக்குள்
ஏகிமனை யாட்டியைப்பார்த்(து) இமையா மின்னூர்
சுகம்விழையேன் எனத்தேற்றிப் புதல்வன் தன்பாற்
சொல்வனசொற்(று) அடற்சேவற் றுவசத் தேர்மேல்
நிகரில்பொன்னூர்க் கேகிஉம்பர் கோமான் கண்முன்
நேர்கின்றான் பணிந்துள் அன்பு கூர்கின் றானே. (56)

## முசுகுந்தன் கீர்த்தனை

கல்யாணி

### பல்லவி

என்னையழைத்தவிதம் ஏது—தேவரீர் இங்கே
என்னையழைத்தவிதம் ஏது.

### அநுபல்லவி

முன்னைச் சுருதிகளும் உம்மைத் துதிப்பதுண்டே
முசுமுகத் தினனென [1]அசுகைப்ப டாதுட்கொண்டே என்னை

### சரணங்கள்

அக்கினி முதலான தேவர் பலரிருந்தும்
அரியிளவரசாதி அருகிற்றினம்பொருந்தும்
முக்கியச்சீர்பெற்றும் அமுதப்பிழம்பருந்தும்
[2]முருக்கிதழ் வாய்திறந்து மூவினையால்வருந்தும் என்னை

வச்சிரத்தினுமென்கை வளைக்கும் வில்லரியதோ
மலைச்சிறகினத்திலும் வலன்புயம் பெரியதோ
நச்சியாவருஞ்சொல்லும் நும்புகழ்க்கரியதோ
நரர்வந்திவ்வுலகுக்காம் நலஞ்செய்தல்உரியதோ என்னை

---

56. 1 இந்திரன், 2 பகைவரை வெல்ல.
57. 1 அருவருப்பு, 2 சிவந்த வாய்,

மதிமுகச்[3]சசிமங்கை மருவுமண்ணளரே
[4]வனசம்போல் ஆயிர மலருங் கண்ணளரே
எதிரற்றபெருஞ் செல்வம் பொலியும் விண்ணளரே
யானையில் மேகத்தில்ஏறுங் குணளரே.

என்னையழைத்தவிதம் ஏது—தேவரீரிங்கே
என்னையழைத்தவிதம் ஏது. (57)

விருத்தம்

போற்றியதோர் முசுகுந்தன் றன்னை வாழ்த்திப்,
[1]புரந்தரன்நின் தவமும்வென்றிப் புகழுந் தேர்வேன்
ஏற்றிடெங்கள் பெருஞ்சேனைத் தலைமை யென்ன
இனிதளித்தான் வாள்வீரர் எவரும் கண்டு
வேற்றிரள்தோட் குகன்தொழிலே பூண்டா னென்ன
மிகமகிழ்ந்தார் மனத்துள்உற்ற வெப்பந் தீர்ந்தார்
காற்றினிலும் கடுகிவலன் மேற்போய் நெஞ்சம்
கடுத்திட்டார் சண்டைசெய்யத் தொடுத்திட் டாரே.(58)

## வலன் சண்டைக் கீர்த்தனை

பல்லவி

அநியாயத்தானவர் மடிந்தாரே—தேவர்
ஆனந்தக் கடலிடை படிந்தாரே.

அநுபல்லவி

மனிதருந் தேவரும் ஒன்றுகூ டிப்போய்ச்சுற்றி
வலனைச் சேனையொடு வதைத்துக்கொண் டாரேவெற்றி அநி

சரணங்கள்

முசுகுந்த ன்எனும்பெயர் கொடுநின்றான்—அந்த
மூர்க்கன் படைத்தலைவன் றனைக்கொன்றான்
கொசுவின் இனத்தைப்பெருங் காற்றடி ததுபோலே
கூடிப்பல் வீரருங் கொதித்துப்பொ ருததாலே. அநி

மாடாடு கோழியா திய எல்லாம்—தினம்
வதைத்துத்தின் றிடும்படி மனங்கல்லாம்
கேடாளர் களும்அசத் தியநெறியி னிற்போகும்
கீழவர் களும்பெருங் கெருவத்தி னருமாகும். அநி

---

3 இந்திராணி, 4 தாமரைமலர். 58. 1 தேவேந்திரன்.

அரம்பையர் கண்களில் நீரோட—எண்ணில்
அசுரமங் கையர்களும் விளையாடப்
பரம்புமு வுலகினும் இரவுப கலாப்பொய்யும்
பழியும்பா வமுமிஞ்சும் படிக்கான தொழில்செய்யும். அநி

வேதா கமநெறி மிகஓங்கப்—பொன்னூர்
வேந்தன்[1]வ லாரியெனும் பெயர்தாங்கப்
[2]போதா வுடன்பல முனிவருங் களித்திடப்
போர்த்திறத் தாற்பெரும் புயங்கமும் நெளித்திட

அநியாயத் தானவர் மடிந்தாரே தேவர்
ஆனந்தக் கடலிடை படிந்தாரே. (59)

விருத்தம்

வலனைவென்ற மகிழ்ச்சியினால் முசுகுந் தற்கு
மகவான்மிக் குபசாரம் வகுத்துச் சொல்லி
இலகுறுதன் அரண்மனையுட் கொடுபோய் நீராட்
டிடன்முதலா வனதனக்கொத் திடச்செய் வித்து
நிலவணிசெஞ் சடையானைப் பூசை செய்தான்
நிகழ்த்துமற்றோன் தொழுதெதிரில் நின்றான்[1] அன்னோன்
குலவுவில்வ நிழலில்அந்நாள் கொடுத்த காட்சி
கொடுத்திட்டான் துதிசெயநா எடுத்திட் டானே. (60)

## முசுகுந்தன் துதித்த கீர்த்தனை

பல்லவி

சிவசிவ சங்கர தேவா—அருள்
செய்திட விடைமிசை தினந்தினம் வாவா

அநுபல்லவி

உவமையில் கவ்ரியுந் தாமும்—எனக்(கு)
உரந்தருங்குமரனும் உடனுறவாமும்— சிவசிவ

சரணங்கள்

முன்னைப்பி றப்பறி வித்தும்—அந்த
முகமுடன் அரசாளும் [1]மொய்ம்பும் அமைத்தும்
உன்னைம றந்தவர் ஒத்தும்—தளர்ந்
துழலுகின்றேன் உண்மைஉணர்ந்தவர் நத்தும் சிவ

---

59. 1 வலனுக்குப் பகைவன் வலாரி, 2 பிரமதேவன்.
60. 1 சிவபிரான். 61. 1 வலிமை,

பந்தபா சவலைப் பட்டேன்—என்றும்
பகைவரைக் கறுவிடும் பழக்கமே தொட்டேன்
கந்தன்அன் பர்க்கும்வேலை யிட்டேன்—நின்பொற்
கழல்களைச் சந்ததங் கருதார்போற் கெட்டேன். சிவ

இச்சேவை இன்றிங்கு தந்தாய்—இல்லை
என்னில் இன்னமும் மறப்பினிற் றேய்வேனெந்தாய்
[2]நச்சேறும் பணியும்உ வந்தாய் — கொன்றை
நகுகங்கைச் சடைமீதெந் நாளுஞ்சேர் இந்தாய். சிவ

மானும் மழுவுமுற்றதோளா--திரு
மால்பன்றி யாய்த்தேடும் வனசப்பொற் றுளா
[3]பானும தியழற்கண் ணுளா--அயன்
பலதவத் தினருடன் பரவுங்கு ணுளா.

சிவசிவ சங்கர தேவா--அருள்
செய்திட விடைமிசை தினந்தினம் வாவா. (61)

### விருத்தம்

எனத்துதித்தான் மனமகிழ்வால் நின்பாற் சேர்தும்
எனச்சொன்னன் இந்திரனேர்ந் தில்லான் யார்க்குங்
கனக்கவிருந் தூட்டிஅம்பொற்[1]பணிதூ சாதி
கணித்தளித்து மன்னனைப்பல் கண்ணுல் நாடி
உனக்கினிவேண் டுவதுளதேல் உரைத்தி யென்றுன்
உன்பூசைச் சிவனைநல்கென் றுருகிக் கேட்டான்
தனக்குஅரிமுன் னுள்அளித்தான் எனஅக் காதை
சாற்றினன் சாற்றிமனந் தேற்றி னனே. (62)

## இந்திரன் கீர்த்தனை

### பல்லவி

இந்தமூர்த்தி யென்றனக்குச் சொந்தமல்ல காணும்
ஈயவென்றுல் மாயவன் றன்சம்மதமும் வேணும்.

### அநுபல்லவி

அந்தநாளில் நெஞ்சிலவன் அணிந்துளங் களித்தான்
அசுரன்வாற் கலிக்கஞ்சல் அறவெனக் களித்தான். இந்த

2 விடம் உடைய, 3 சூரியசந்திரர்.
62. 1 ஆபரணம், புதிய ஆடை.

சரணங்கள்

மன்மதன் பிறக்கும்படி வரங்கொடுத் ததுவும்
மலேமக ளிடுஞ்சாபம் மாறவிடுத் ததுவும்
என்மனம கிழ்ந்துதலே மீதிலெடுத் ததுவும்
இங்குவந்தென் குடிமுழு தாளத்தொடுத் ததுவும். இந்த

வேதமுடன் ஆகமங்கள் அத்தனேயும் பாடும்
வெண்பிறையும் கொக்கிறகும் செஞ்சடையிற் சூடும்
பாதமொன்றைத் தூக்கிக்கொண்டும் காளியெதிர் ஆடும்
பன்னிரண்டு சமயத்தும் பல்பொருளா நீடும். இந்த

கந்தன்ருட் பேறுமிகப் பெற்றகன வானே
காசினிமுற் ருேர்குடையிற் காக்கும்வலி யோனே
வெந்தகுவர்க் கொன்றுவெற்றி தந்தனேநீ தானே
வீரமுசு குந்தமன்ன மெய்பகர்கின் றேனே.

இந்தமூர்த்தி யென்றனக்குச் சொந்தமல்ல காணும்
ஈயவென்ருல் மாயவன்றன் சம்மதமும் வேணும். (63)

விருத்தம்

இந்திரனிவ் வாறுசொல்ல முசுகுந்தன்
பாற்கடலுக் கேகி மாயன்
புந்திமகிழ் வுறவணங்கிப் போற்றினன்
அவன்கருணே புரிந்தான் மீண்டு
வந்தியம்பி னன்,மகவான் வேறுமூர்த்
திகள் ஆறு வகுத்(து)ஒவ் வொன்ருத்
தந்திடலும் பெற்றிவையன் றெனமறுத்திட்
டுள்ளபடி தரப்பெற் ருனே. (64)

## மூர்த்திகள் அமைத்த கீர்த்தனே

பல்லவி

பெற்ற மூர்த்திகள் ஏழுமிவ்வுலகத்திற்
பிறங்கிட அமைத்தானே.

அநுபல்லவி

மற்றடங் தோள்வலன் சண்டைக்குப் போய்வென்று
வந்த முசுகுந்தன் இந்திரன் தந்திடப்— பெற்ற

சரணங்கள்

விண்டுமுன் நாட்பூசை—செய்திட்டதொன்றும்
விசுவகன்மா வதனைக்
கண்டுசெய்தவையாறும் ஆகியொன்றென்றுயே
கையினில் வந்துசேரத் துய்யமா தவத்தினற். பெற்ற

மான்மழுக் கைச்சிவனும்—பாசாங்குசம்
வைத்தகைப் பார்வதியும்,
பான்மணக் குங்கனிவாய்க் குமரனுங் கூடிப்
பலர்க்கும் வரந்தரும் படிவிண்ணில் வருங்கோலம். பெற்ற

அருட்குறிப் புணர்த்திடுமோர் மூர்த்தியை
[1] ஆரூர்க்(கு) அரசராக்கி
இருட்டுநெஞ் சினர்தேற இருமூன்று மூர்த்தியும்
இசைவாகித் தோற்றிட [2] இயைந்தவூர்
தொறும்வைத்துப் பெற்ற

அட்டமூர்த் தியும்ஆகி-ஏகமுமாகி
அனந்த மூர்த்தியும் ஆகிச்
சிட்டர்சிந் தையில்வளர் சிவனையார் அறிவாரோ
செங்கதிர்க் குலத்தோருட் சிறந்ததோர் மன்னவன்

பெற்ற மூர்த்திகள் ஏழுமிவ் வுலகத்திற்
பிறங்கிட அமைத்தானே. (65)

விருத்தம்

விழவனந்தம் நடத்திமுசு குந்தன் நோற்றுன்
விண்ணவர்கோ மானும்வந்து வியந்து போற்றிப்
பழவினைப்பாழ்ந் துயர்நீங்கிப் போனுன் வேந்தன்
பைந்தமிழ்த்தென் கருவூரிற் பலநாள் வைகி
மழவிடைநேர் அங்கிவர்மப் பெயர்ச்சேய் தாங்க
வானெடுபார் மகிழஅருள் வசிட்டன் கையால்
அழகியமா மணிமகுடஞ் சூட்டி யின்பம்
ஆர்ந்திட்டான் கயிலைமலை சேர்ந்திட் டானே. (66)

---

65. 1 திருவாரூர்.
2 கடல்நாகை நள்ளாறு காறுயல் கோளரியூர்
மடனுக முத்தீனும் வாய்மியூர் மறைக்கானம்
உடனுகும் தல்மாறில் ஒராறு வடிவுகொண்ட
படநாக மதிவேணிப் பரஞ்சுடரை அமர்வித்தான்.
(கந்த. கந்தவிரதப்படலம் 118) என்பது காண்க.

## முசுகுந்தன் கயிலாயம்சேர்ந்த கீர்த்தனை.

### பல்லவி

கயிலாச பதவியின் முசுகுந்தன் போயுள்ளம்
களித்துவீற் றிருந்தானே

### அநுபல்லவி

பயிலுந்தன் தவத்தினில் பாதிப்பாத் தியங்கொள்ளும்
பத்தினி யாகிய சித்திர வல்லியுடன் கயிலாச

### சரணங்கள்

உலகவாத னைமுற்றும் நீங்கிம யக்கமற்ற
உண்மை யுணர்ச்சிமிக ஓங்கிமெய் யடியவர்
திலகமெ னும்புகழ்ச்சி தாங்கிச்சத் துவசீலச்
சின்மயா னந்தத்திற் றேங்கிநித் தியமான கயிலாச

[1]மூன்றுவ கைக்குற்றமும் தள்ளித்தே வர்கள்வாழ்வும்
முடிவுபடும் என்றெண்ணி எள்ளி இனியுலகில்
தோன்றுகில் லேனெனத் துள்ளிக் களங்கமற்ற
சுத்தக் கட்டிச்சொக்க வெள்ளி மலையாகிய கயிலாச

சிவனும் பரையும்இரு சேயும்நந் தியு[2]முக்காற்
சீலனும் [3]தண்டியும் பாயும் புலியும் பாம்பும்
அவமில்பல் கணங்களும் தோயுஞ் சபைநடுவில்
ஆனந்த வெள்ளத்தில் ஆயுமருமைத்திருக்

கயிலாச பதவியின் முசுகுந்தன் போயுள்ளங்
களித்துவீற் றிருந்தானே. (67)

### விருத்தம்

துங்கமுசு குந்தன்முத்தி யடைந்த பின்பு
துணையாய வீரரெல்லாம் சுடர்வேற் பெம்மான்
பங்கயத்தாள் கருதியவன் விரதஞ் செய்து
பழையவடி வமும்பதமும் படைத்தார் அன்னோர்
தங்கள்மனை மார்சுவர்க்கம் புகுந்தார், மைந்தர்
சழக்கில்அங்கி வருமனுக்குச் சகாய ரானார்
கங்கணக்கைத் துணைவியரால் தாங்கள் வேண்டும்
கன்னியரால் மனுக்குலத்திற் கலந்திட் டாரே. (68)

---

67. 1 ஆணவம்–கன்மம்–மாயை (தோற்றம்–திதி,ஒடுக்கம்) 2 பிரீங்கி முனி. 3 சண்டேஸ்வரர்.

## கந்தவிரதப்பலன் கீர்த்தனை

பல்லவி

கந்தவி ரதபலங் கேளும்—உலகத்தோரே
கந்தவி ரதபலங் கேளும்.

அநுபல்லவி

எந்தெந்த வுலகத்தில் இருக்கும் எத்தனைபேரோ
இட்டசித் தியடைந்தார் முற்றும்அறிவார் ஆரோ. கந்த

சரணங்கள்

தந்தை யானசிவன் தாரகப் பொருள்கற்றான்
தாமோ தரனும்மாமன் சக்கரப் படைபெற்றான்
அந்தணன் சிறைநீங்கி அம்புய மிசையுற்றான்
அமரா பதிக்கிறை அசுரர் கலக்கமற்றான். கந்த

அகத்திய மாமுனி அருந்தமிழ்க் கடலீந்தார்
ஆரணன் தரவந்த நாரதர் புகழ்தோய்ந்தார்
சுகப்படும் படியிரு மாதர்மங் கலம்வாய்ந்தார்
தூயசங் கப்புலவர் சொற்சுவை முழுதாய்ந்தார் கந்த

செல்வப் பகீரதன் பகையறும் படிகண்டான்
திரிசங்கு மன்னனேர் திவ்விய பதிகொண்டான்
வில்வலி வேடனேர் வேந்தாகி முறைவிண்டான்
மேதகு முசுகுந்தன் விண்ணூர் விருந்தும்உண்டான் கந்த

கீரன்அருணகிரி ஆதியர்க் கருள்காட்டும்
கிளிமொழி [1]ஒருத்திக்குக் கெட்டகை உடன்கூட்டும்
பூரண சமரச ஞானக்கடலில் ஆட்டும்
பொருவருந் திருப்புகழ் புவனியில் நிலைநாட்டும் கந்த

மக்கட் பேறுமுத லானவெல்லாம்உண் டாக்கும்
மறலிகை வசப்பட்டு வருத்தம்உ றுமற்காக்கும்
[2]பொக்க மானமாயைப் போர்முழு மையும்போக்கும்
புண்ணிய மாதவப் பொலிவுறும் படிதேக்கும்

கந்த விரதபலங் கேளும் உலகத்தோரே
கந்த விரதபலங் கேளும். (69)

---

69. 1 முருகம்மையார். 2 பொய்யான.

விருத்தம்

**கந்தனது புராணமதிற் கச்சியப்பன் சொன்ன**
**கந்தவிர தப்படலக் கதையதனை நாடி**
**இந்தவண்ண முசுகுந்த நாடகமென் றிசைத்தேன்**
இசைப்புலவர் பாடுதற்கும் எழிற்பரத நூலோர்
தந்தமர்கொண் டாடுதற்கும் ஆமெனிறும் செஞ்சொற்
தமிழ்ச்சுவையுஞ் சதிச்சுவையுஞ் சார்தரில் நன்குகும்
அந்தரத்தோர் கண்டுகண்டு தெண்ட னிடக் கறுத்த
அங்களத்தார் முதற்பலர்க்கு மங்களஞ் சொல்வேனே. (70)

## மங்களம்.

பல்லவி

செயமங் களம்செய சுபமங்களம்—உண்மைத்
திருவருட் செயலுக்கே செயமங்களம்

அநுபல்லவி

நயனமோர் மூன்றுடைய நாதனுக்கு மங்களம்
நாராய ணன்பணிந்த பாதனுக்கு மங்களம். செய

சரணங்கள்

அம்பிகை பெற்றெடுத்த பாலனுக்கு மங்களம்
ஆனைமுகன் பின்பிறந்த சீலனுக்கு மங்களம்
வெம்பிடுந் தானவர்தம் காலனுக்கு மங்களம்
வீராதி வீரர்புகழ் வேலனுக்கு மங்களம். செய

அட்டவித மூர்த்தியறி பத்தருக்கு மங்களம்
அறம்பெரு கிடச்செய்யுஞ் சித்தருக்கு மங்களம்
தொட்டபுகழ்த் தேகமுற்ற நித்தருக்கு மங்களம்
சுத்தபர ஞானசுக முத்தருக்கு மங்களம். செய

சூரியன் முதற்பகர் தேவருக்கு மங்களம்
தூயமுசு குந்தன்முதற் பூவருக்கு மங்களம்
சீரிய தமிழ்பகர் நாவருக்கு மங்களம்
தெய்வமுண் டென்னுமவர் யாவருக்கு மங்களம்.

செயமங் களம்செய சுபமங்களம் உண்மைத்
திருவருட் செயலுக்கே செயமங்களம். (71)

## வாழ்த்து

பழுதறுவே தாகமங்க ளெல்லாம் வாழி
பசுவுயர்வே யெனுமதங்கள் பலவும் வாழி
கழுதொடுகூத் தாடுமம்மான் கருணை வாழி
கவுரியம்மை வாழிஐங்கைக் களிறு வாழி
முழுதுணர்ந்த புலவன்விளை யாடல் வாழி
முனைவீரர் வாழிமுசு குந்தன் வாழி
எழுதொருபே ரேட்டினன்பர் எல்லாம் வாழி
யான்வாழி யெனைச்சார்ந்தோர் இனமும்வாழி. (72)

முற்றிற்று

தெய்வமே துணை.

---

நூலாசிரியர் காலத்திற்குப்பின்னர் அவர்களது குமாரரும், மாணவருமான சந்தப்புலமை தவத்திரு. செந்திநயக அடிகளார் திரு. நாராயணசாமிப்பிள்ளை கம்பெனியார் இந்நாடகத்தை நடிக்க விரும்பியபோது கதையின் விளக்கம் கருதி நடிப்பின் நேர்முறைக் கேற்பப் பாடித்தந்தவைகளை 43-ம் பக்கம் முதல் காண்க.

---

# *பிற்சேர்க்கை

2-ம் பாடலை அடுத்து

**சிவன்-விருத்தம்**

கூவிளத் தழைகள் கொய்து குணமுடன் எங்கள்மீது
தூவிய குரங்கே உன்றன் தொண்டுநாம் உகந்து கொண்டோம்
நீவிரைந் தேகிப் பாரில் நிகழ்மனுக் குலத்திற் சேயாய்
மேவியம் புவிமுற் றுண்டு மிகமகிழ்ந் திருந்தி டாயே. (1)

4-ம் பாடலை அடுத்து

**சிவன்-விருத்தம்**

இம்மரத் தழைக ளாலே எமையருச் சித்த நீதான்
எம்மது மொழிக்கு மாருய் இசைத்திடத் துணிந்த தேனே
சம்மத முடனே சென்று தரையெலாம் செங்கோ லாற்றி
விம்மித முறஇ ருந்து மீண்டிவண் அடைகு வாயே. (2)

## முசு (குரங்கு) வேண்டுதல் கீர்த்தனை

இராகம்-அம்சத்தொனி] [ரூபகம்-தாளம்

பல்லவி

வரங்கொடுத் தருள்வாய்—எனக்கொரு
வரங்கொடுத் தருள்வாய். (வர)

**அநுபல்லவி**

குரங்கெனச் சினந்தே மொழியாமற்
குளிர்மெய்க்க ருணை குலவ மேன்மை. (வர)

**சரணம்**

எத்தனைவிதப் பெருமையாளர் யாவரெனினும் இகத்தினூடு
நத்திஉருவம் கொண்டுபிறந்தால் நலியமாயை அலைக்குமதனுல் (வர)

இந்தக்குரங்கு முகத்தினேடிங் கினிய பிறவியெடுக்குமாறும்
சொந்தக்குணம் யான் பழகியது நின்தூயமொழியும் மறந்திடாத (வர)

உமையவட்கிடம் கொடுத்தநாதா ! உலகமுழுதும் மலரும் பாதா
சமையபேதங் கடந்தநீதா ! சனகாதிய ரடைந்தபோதா. (வர) (3)

---

* முசுகுந்த நாடகப் பாடலின் பாட்டெண்களை முன்னிட்டு, இதிற் குறித்திருக்கிறது. அந்த முறைப்படி இந்த எண்ணின் பாடலைப் படித்தால் கதைத்தொடர்பு வரும். அதிலுள்ள விருத்தப் பாடல்கள் முரண்படும். அதன் முறை ஒரு தொடர்பு. நேர்முறை நடிப்புக்காக இவை இடையிற் சேர்க்கப்பெற்றன.

8-ம் பாடலை அடுத்து

## ஷி கீர்த்தனை

ராகம்-பைரவி] [தாளம்-ஆதி

பல்லவி

வசிட்ட மாமுனியே—குருபர குமரனை வழிபடும்
நலமருள்வா யுயர். (வசிட்ட)

அநுபல்லவி

பசித்த கோசிகன் இளைப்பு மாறிட
அளித்த மாதவ குணத்த யாபர. (வசிட்ட)

சரணம்

பரவிபவுலக மெலாமொரு குடையில், பரிக்கவே மிகுவிருப்பமாய்
சரவணபவசிவ குருபரனருள் கொடு, தழைக்கும் வீரர்கள் துணைக்கொடே
உடமுடனதுசெயல் நலமெனும் நினைவுடன் உவப்பினுலுனை யடுத்துளேன்
அரன்விழி யனலிடை வருமவன் மறையினை
அருளுடன் மொழிதரில் அதிநலமடைகுவன். (வசிட்ட) (4)

## ஷி கீர்த்தனை

ராகம்-பியாக்] [தாளம்-ஆதி

11-ம் பாடலை அடுத்து

இதுதருணம் மயில்மிசையே
எனக்கெதிர் வரத் திரு வுளத்திசைவாய் (இது)

சதுமுகனை அழப்புடைத்துத்
தளையிடும் முழுதுணர் சரவணனே (இது)

சரணங்கள்

உனதுதிரு வடியினையே உன்னிடும் மதியணு வேணுமிலேன்
உம்பர்களும் எய்தரிய உயர்கதிபெறவிழை வுறுசிறியேன்

தினகரரா யினர்எனவே திசைமுழு தினும் அருள் ஒளி தரவே
தேவர்கள் மூவர்கள் மாதவ யோகியர்
தேடிய சேவடி யோடடி யேனெதிர் (இது)

இவ்வுலக வாழ்வினையே இன்பமெ னுமன மருள்கின்றேன்
என்றும்உன தடிமறவா திருந்திட விழைந்திவண் வருந்துகின்றேன்

கௌவலந்தீ வினிலுனையே நாடிஅ நாள்முரு காஎனுமோர்
நங்கையொர் செங்கைய றுந்துவி முந்திட
அங்கு நடந்தரு ளுங்குண புங்கவ (இது)

தேவர்துயர் அகன்றிடவே தீப்பொறி யெனச்சிவன் நேத்திரத்தில்
திருவருவங் கொடுதோன்றும் சிவகுரு பரசரவணபவனே

சேவலங்கே தனமேந்தும் சேவக னேசெந்தி நாயகனைத்
திகழ்தரு முனதருள் பெறும்அடி யவரொடு
செறிதரும் வணமருள் புரிதரு குமரனே. (இது) (5)

## முருகப்பெருமான் கீர்த்தனை

12-ம் பாடலை அடுத்து

பல்லவி

வந்தேன் வந்தேன்---உன்றன்
மனத்திடை நினைத்துள வரத்தினை யளித்திட வந்

அநுபல்லவி

செந்தேனெ னத்துதிகள் விண்டே கணிற்புனல்பெய்
தன்பால் மணக்குமுசு குந்தா நினைத்தபடி வந் (6)

14-ம் பாடலை அடுத்து

விருத்தம்

குருவசிட்டன் உரைத்தமொழி யதனிற் சற்றும்
கோணுமற் சந்ததமும் குறிக்கொண் டென்னை
மருவுடைப்புட் பங்களினல் அருச்சித் தேத்தி
மாதவஞ்செய் திளைத்தமுசு குந்தா கேளாய்!
பொருவருமுன் தவத்தால்யாம் மிகவும் இன்பம்
பூண்டெதிரிற் சேவைதந்தோம் புனிதா! நீதான்
கருதும்வரம் இன்னதெனக் கேட்டால் ஈவோம்
காசினியிற் பெற்றுமிகக் களிப்பாய் நீயே. (7)

பல்லவி

தந்தேன் தந்தேன் என்னைச்
சாருமி லக்கத்தொன்ப தாகுந்தம் பியர்தமை தந்

அநுபல்லவி

அந்தோ பலுயிர்களைக் கொன்றேதி னுங்கடையர்
வெந்தோட முறுமகச் சண்டாளப் பனவர்கள்
சிந்தாகு லங்கொளச்செய் தன்பா லடியர்மனச்
சந்தோட முறும்படி செங்கோல்செ லுத்தவரம். தந் (8)

## வீரவாகுதேவர் கீர்த்தனை

43-ம் பாடலை அடுத்து

பல்லவி

இராகம்-அடாணு] [தாளம்-ஆதி

இதோ போய்வருகி றோம்
இரவிகு லத்தில்வரும் எழில்முசு குந்தனே இதோ

சதாஎ. மதுமகள் தன்கையிற் கொண்டுமிகச்
சந்தோட மாய்வளர்த்த பைங்கிளியைக் கொண்டுவர. இதோ

உமதரண் மனையிடை புகுந்தே—தன(து)
உளத்தினில் அகமதுமிகுந்தே—இங்கே
எனதும கள்கரத்தில் இருந்ததோர் கிளியினை
எவ்வித மாகவோ எடுத்தஎ மன்உலகுக்(கு) இதோ

கிளியைத்தன் மனையவட் களித்தே—வீண்
கெருவத்தி னுல்மனங் களித்தே—அங்கே
எளிய மானிட ரென் றெண்ணித்தன் தூதருடன்
ஏளனம் பேசிக்கொண் டிருப்பானே யிந்நேரம். இதோ

வைவச்சுதபுரத்திலேகி—அந்த
மறலி அவையிலெதிராகி—மிகு
கைவர்த் தனைச்சமர்கள் காட்டிய வன்புலம்பிக்
கதறக்கண் களிற்புனல் சிதறப்ப தறச்செய்ய இதோ (9)

44-ம் பாடலை அடுத்து

வீரவாகுதேவர்-விருத்தம்

கந்தவே ளருளைப் பெற்ற கனமுசு குந்த மன்னன்
சுந்தர மனையாள் கையிற் றுலங்கிய கிள்ளை தன்னை
எந்தமார்க் கத்தி னுலோ எடுத்துவந் திட்ட காலா
தந்திடு தாரா விட்டாற் சமர்புரிந் ததைக்கொள் வோமே(10)

எமன்-விருத்தம்

எனதுதூ தரைக்கண் டாலும் ஏங்கியே பதறும்அ ற்ப
மனமுடை யவராஞ் சின்ன மானிடப் பதர் காள்உங்கள்
இனமு சுகுந்தன் றேவி யிருகையில் வளர்த்த கிள்ளை
தனையெடுத் திட்டேன் யானே தருகிலேன் சமர்செய் வீரே.
(11)

வீரவாகுதேவர் கீர்த்தனை-பின் முடுகு

பல்லவி

இராகம்—மோகனம்] [தாளம்—ரூபகம்

பாரடா எங்கள் பலத்தை யிப்பொழுதே—கட்டைப்
பகடேறிய சமனேபத ரெனவேசிய பயலேயிதோ.

அநுபல்லவி

பாரடாஎங்கள் பலத்தை யறியாமற்
பலவித மாகச்சாமர்த் தியமுடனே சிப் பேசினை பாரடா

சரணங்கள்

இந்திரன் முதலாயுள்ளோர் எண்ணிறந்த பல்தேவர்கள்
சிந்தைமகிழ்ந் திடுமாறே தெவ்வர்களைக் கருவறுத்த
கந்தனருள் பெற்றிடுமுசு குந்தன்மனையவள்கையின்
சொந்தமெனுங் கிளியதனைத் தந்தால்நீ பிழைத்திடுவாய் பார

பச்சிலை மலரால்நித்தம் பரமனையே தவருமற்
பத்தியுடன் பூசித்துப் பணிந்திடுமார்க் கண்டன்பால்
அச்சமறப் போயீசன் அடிமலரால் உதைபட்டது
நிச்சயமா யிருந்துமல்லத நினையாம லெதிர்வந்தாய். பாரடா

அவமாய்ப்பூ மியில்விழுந்தே அழுமாறுன் றனைக்கொல்வோம்
இவராரோ தேவர்களென் றெண்ணிமிகத் தளர்கின்றாய்
சிவனாரரு ளாலுன்னைச் செகுத்திடவே யிங்குவந்தோம்
கவலாமற் சமர்செய்வாய் கடுகியிதோ கணைவருவது பாரடா (12)

## ஷ கீர்த்தனை

இராகம்–மோகனம்] [ஆதி–தாளம்

பல்லவி

இயமா எமை யெதிர்த்திட மிகுபுய
பலத்தின ஞேஜெய நலத்தினஞே அட இயமா

அநுபல்லவி

நயவார்த் தைகள்கேட்டத னுலகமாய்
நகைத்தாய் மிகவும் பகைத்தாய் அடடா இயமா

சரணங்கள்

எடுத்ததொர் கிளியினைக் கொடு—இனி
இந்தக் குணங்களைநீ விடு—முகங்
கடுத்தசொல் லொழித்துடன் படு—அறக்
காலனென் றிடும்பெயர் நடு—அட. இயமா

ஏவினேன் அர்த்தச்சந்திர கணை—இதோ
எறிகின்றேன் சூலமதன் துணை—கடும்
பாவியு னக்கிங் கேயார்இணை—வீண்
பழிசே ராமல்நற் பண்பினு டிணை. இயமா

முருகன் அடித்தொழும்பு விடான்—அருள்
முசுகுந்தன் எனும்புகழ் கெடான்—அவன்
பொருநர்க் கெதிர்முதுகு கொடான்—எமைப்
போக்கினன் இன்னிடம் அடா கரிய இயமா (13)

## எமதருமன் கீர்த்தனை-பின் முடுகு

இராகம்–பந்துவராளி] [ரூபகம்–தாளம்

பல்லவி

மானிடரே யென்ன செய்வீர்
மனவேகத் துடனேபற் பலர்கூடிப் பொரவந்திடும் மானி

அநுபல்லவி

வானிடத்துள்ள அமரர்கள் தம்மையும்
வலைவீசிஅன் னவராருயிர் கொளுமாண்மையை அறியீர்சிறு மானி

சரணங்கள்

மாநிலம்ஆள்முசு குந்தனெனுமந்த மன்னனரண்மனை அடுத்தேன்—அவன்
மனையவள்கையில் வைத்துவளர்த்து மகிழ்ந்தகிளியினை யெடுத்தேன்— அதை
மானமுடனுங்கள் கையிலளித்திட மாட்டேனெனச்சமர் தொடுத்தேன்-என்னை
மருவிப்பல கணையேவியே சமரிட்டவள் கரமேவிய
கிளியைக் கொடு போய்விடு வது மிகவுத்தம மாம் நிசமிது—மானி

என்னுடன் சண்டைபுரிந்துஜெயங்கொள எண்ணி எதிர்வந்து நின்றீர்-எங்கள்
இறையவன் முசுகுந்தன் மனையவள் கையில் இருந்த கிளிகொடு வென்றீர் உம்மைச்
சின்னபின்னப் படவிந்தக் கணையைச் செலுத்துவோ மென்றுவாய் மென்றீர்— ஒன்றுஞ்
செய்யத்தெரி யாமலேநீர் பொய்யிப்படி யோதுகின்றீர்
நையச்சிலை யாலொருகணை எய்கின்றேன் பாருமிதோ — மானி

ஏமனெனும்பெயர் காதிடைகேட்டவர் ஏங்கிமனமிக வெருள்வார்—இங்கே
என்னையெதிர்த்தவர் யாவரேயாயினும் இந்தப்புவிமிசை உருள்வார்—அந்தத்
தாமரை மேல்வளர் வோன்முதல்மூவர்கள் தாமும் வியந்தெனை யருள்வார்— நீர்தாம்.
தவிடளவும் பயமின்றிச் சிலைகணையா நியகொண்டே
சதுர்விதசே னைகள்சூழச் சமர்செயவே நினைவுற்றீர் மானி (14)

54–ம் பாடலை அடுத்து

## தேவேந்திரன் வலன் சண்டைக் கீர்த்தனை

இராகம்–மோகனம்] [சாப்பு–தாளம்

பல்லவி

அடுத்தெ னுடனமர் தொடுக்க வெதிர்வருவாய்-வலனேயிவேளையில்
அடுத்தெனுட னமர் தொடுக்கவெதிர் வருவாய்

அநுபல்லவி

அடுத்த வுனதுபல் படைத்தி ரளுமற
நொடிக்கு ளொருகணை யனுப்பிவி டுவேன் அடுத்

சரணம்

இதற்கு முனமெமை மிகுத்த துயர்புரி
விருத்த னெனுமொரு பலத்த வசுரனைச்

சிதைக்க வொருமுனி யளித்த வயிரமென்
இடத்தி லுறுவது விடுக்கி றேன்பார். அடுத்

தவத்தின் மிகுசில அரக்கர்அமரரை
அழச்செய் திடுவதும் அதற்பின் முடிவினில்
உவப்பில் அமைவகை எமக்கும் அழிவுறல்
அவர்க்கு மிசைவது வழக்க மேயாம். அடுத்

மனத்தி லகமது படைத்து நிசமறும்
முழுப்பொய் சொலியுயிர் வதைத்து முடைசெறி
பிணத்தி லுளதசை கடித்து நினைவற
மயற்செய் புனலது முடிக்கு மூடா அடுத்

கதிக்கொர் துணைகுரு பதத்தை யலதிலை
யெனச்சொல் பெரியவர் பதத்தி லுதிர்துகள்
சிரத்தி லணிதரும் வழக்க முறுமெமை
யெதிர்க்கி லுனதுயி ரழிக்கும் வேலே. அடுத்

அதட்டி மிகுபுய பலத்தி னுடனிதம்
இரட்டி யமரரை யழச்செய் தனையுனை
வதைத்து மகிழ்வுற லெனக்கு முடிவது
வருத்த மெனநீ நினைத்தி டாதே. அடுத் (15)

வீரவாகுதேவர் விருத்தம்

தருமனென் றுரைக்கும் பேரை த்தலைமிசை சுமந்த நீதான்
திருமலி முசுகுந் தன்றன் தேவிகைக் கிள்ளை கொள்ளல்
பெருமையோ வுனக்குப் புத்தி பேசுவோ ருலகி லுண்டோ
அருளுடன் போவோம் நாங்கள்அ நுதினம் வாழ்வாய் நீயே. (16)

## முசுகுந்தனும் சித்திரவல்லியும்

இராகம்—நாதநாமக்கிரியை] [சம்பை—தாளம்

55-ம் பாடலை அடுத்து

கண்ணிகள்

முசு. இந்திரன்றன் அழைப்பதனுல் யான்சுவர்க்க மேகியிங்கு
வந்திடுவேன் உத்தரவு வழங்கிடு வாய் பெண்ணே (17)

சித். பொன்னுலகத் துள்ளபல போகமின்னுர் தங்களைக்கண்டு
என்னுரிமை மறந்துவிட்டா லென்னசெய் வேன்அரசே (18)

முசு. கந்தனரு ளாலுனையே கவின்மனையாய்ப் பெற்றிடும்நான்
எந்தவிதப் பெண்களையும் இச்சையுறேன் கண்ணே (19)

சித். நின்னையொரு கணமேனும் நீங்கியிருந் திடுவேனே
என்னையழைத் தேகுதலே இதமாகும் அரசே (20)

முசு. அசுரருடன் சண்டைசெய்ய ஆசைகொண்டு சென்றிடும்நான்
விசுவமிருந் துனையழைத்து மேவுதலேன் பெண்ணே (21)

சித். சண்டையிட்டால் வெற்றியெவர் சார்வரெனத் தேர்வரிது.
விண்டமொழி யான்பதைக்க விட்டதுகாண் அரசே (22)

முசு. நீலமயி லோன்கிருபை நின்றெனக்கு வென்றிதரும்
சாலமகிழ் வோடுவிடை தந்தருள்வாய் கண்ணே (23)

சித். சென்றுசெயம் கொண்டுபல தேவர்புகழ்ந் தேத்தவுயர்
நன்றுடைய ஞாகியிங்கு நண்ணுகவென் அரசே. (24)

58-ம் பாடலை அடுத்து

முசுகுந்தன் விருத்தம்

தேவர்கள் தம்மை யெல்லாந் தினந்தினந் துன்பஞ் செய்யும்
மாவலா சுரனே யுன்னை மடிக்கவே யான்வந் துள்ளேன்
சேவலங் கொடியோ னுண்மைத் திருவருள் பெற்ற என்னைக்
கேவல மாக வெண்ணிற் கெட்டொழிந் திடுவாய் நீயே. (25)

வலாசுரன் கீர்த்தனை.

இராகம்-அடாணு] [ஆதி-தாளம்

பல்லவி

வீணுயு னைப்புகழ்வ தேன்—கணைகளை
விடுத்துப்போர் புரியாம லெடுத்துப்பல் விதத்தினில் வீணு

அநுபல்லவி

நாணும லமர்செயும் நடுப்போர்க் களமதனில்
நாணியைப் பிடித்தொரு பாணமே னுந்தொடாமல் வீணு

சரணங்கள்

இந்தஇடத்திலென்ன நாணம்—இதோ
ஏவுகின்றேன் என்றன் பாணம்—உன்றன்
சிந்தையாணவமெல்லாம் சிதறியோ டிடும்படி
செய்குவேன் தலையினைக் கொய்குவேன் முசுகுந்தா வீணு

நானே அசுரர்குல தீபன்—எனை
நாடிவந்த நீமனித பூபன்—இங்கு
வானோர் நகைக்கவின்று தானேயி றந்தொழிவாய்
ஏனோவு னக்குவிதி யானலும் பாரொருகை. வீணு

பூவுல கினைவிட்டு வந்தாய்—அந்தப்
புரந்தரற் கபயமுந் தந்தாய்—மிக
மேவுஞ்ச மர்த்திறத்தால் விரைவிலெ னைச்செயிக்க
வேண்டிய படிசெயம் மூண்டிடல் மறந்திங்கே. வீணு (26)

முசுகுந்தன் கீர்த்தனை-பின் விரைவு

இராகம்-மத்திமாவதி] [சாப்பு-தாளம்

பல்லவி

போர்புரிவாய் வலா சுரனேநீ
போர்புரிவாய்.

அநுபல்லவி

போர்புரி வேனென்று பொன்னுலகத் தேவரெதிர்
பொங்கிமிகப் பேசுகின்ற யிங்கென் னெதிரினின்று போர்

சரணங்கள்

கந்தனருட்செயலால் நவவீரர் களைத்துணை யாகப்பெற்றேன்—அந்தக்
காசினி முற்று மொருகுடை நீழலிற் காக்கும் வலிமையுற்றேன்
இந்தவா னுல கத்தினிலிந்திரன் என்னைவி ழைந்தழைத் திட்டதனுலிங்கு
வந்தீருஞ் சமர்செய்திட வுன்னெதிர்
வாய்ந்துநின்றனன் ஏங்கவென்றுறு
தீங்கறுஞ்சுகம் ஓங்கும் வன்புறு. போர்

உன்னைப் போற்பல தானவர்தேவரை ஒல்கத் துயர்செயலும்—அவர்
உத்தமக்குணத் தாற்சிவனுரருள் உற்றழித் தேஉயலும்
என்னைப் போலுளமானிடர் யாவரும் என்றுமறிந்திட நன்றுவிளங்கவும்
தன்னை மேலென எண்ணிநின் வாய்மொழி
சாற்றி யெங்களைத் தூற்றி வெஞ்சமர்
ஏற்று நின்றனை வேற்று நெஞ்சொடு போர் (27)

63–ம் பாடலை அடுத்து

## முசுகுந்தன் திருமாலிடம் வேண்டல்

சந்தவரை வந்தகுக நாதா என்ற காவச்சிந்து மெட்டு

சிந்து

சங்கமுடன் சக்கரங் கோ தண்டு—முதற்
சாற்றுபல ஆயுதத்தாற் பண்டு—பல
தானவரைக் கொன்றபுகழ் கொண்டு—காற்றை
யுண்டு—மேல்சு—ருண்டு—சினந்
தங்கமலையும் பிறழமண்டு—
செங்கண ரவத்தின்மிசை ஆர்ந்து—வியன்
செந்திருவுந் தண்புவியுஞ் சேர்ந்து—இரு
சீரடிவருட மகிழ் கூர்ந்து—உளன்
பார்ந்து—புக—ழோர்ந்து—அன்பர்
செய்திடுந் துதித்துவகை சார்ந்து
சீர்மிகும் வெண் பாற் கடல்வாழ் மாயா—முனந்
தேவகிமகிழவந்த சேயா—இந்தச்
செகத்தையு முண்டுமிழ்ந்த வாயா—மிகு
தூயா—கரு—தாயா—தமிழ்
செப்பொரு பதின்மருளர் நேயா—
இந்திரற்கு நீயளித்த மூர்த்தி—தனை
யான்பெற வழங்கு மனப்பூர்த்தி—யுடன்
எழுகடல்சூழ் புவியில் சீர்த்தி—யுற
ஆர்த்தி—கொடு—கீர்த்தி—பெற
ஏத்திப் பணிய வெகு நேர்த்தி
தென்கலை வடகலை யென்றூடி—பலர்
சேர்ந்துவெகுவாய்ச் சமர்களாடி—மிகு
தீமையுற வேதனைகொண்டோடி—பொருள்
தேடி—மனம்—வாடி—உழல்
செய்கையறச் செய்யு ளத்தால்நாடி.

13x21 OH, KKA, K:9 NEP



எல்லாக்கலையு முனதன்றோ--அதை
யாவரு மறிந்துகொள லென்றோ--உன
தின்னருளின் சீர்த்திவகை யொன்றோ--சொல்வார்
இன்றோ--வஞ்சம்--நன்றோ-ஞானம்
எய்திடுதல் வாதுவழி சென்றோ.

தென்குருகை யின்புளியின் பாலே--வரு
சீர்கொள்சட போபன்அரு ளாலே--பகர்
செய்யதிரு வாய்மொழிப்பேர் நூலே--மிக
மேலே--என்றுன்--காலே--தொழும்
செம்மைகொளச் செய்கதிரு மாலே. (28)

## திருமால்-சிவவடிவைப் பெற்றுக்கொள்ள அநுமதி தருதல்

என்னது மார்பிற் பன்னாள் இனிதணிந் திருந்த ஈசன்
தன்னை இந் திரன்றன் துன்பம் தவிரமுன் கொடுத்திட் டேன்யான்
உன்னது விருப்பம் போலே உற்றஅம் மூர்த்தி தன்னை
நன்னல முறவே பெற்று நானிலத் தமைப்பாய் நீயே. (29)

## இந்திரன் முசுகுந்தனிடம் மூர்த்திகளை உதவி வாழ்த்தல்

நொண்டிச்சிந்து

பூவில்முசு குந்தமன்னனே--இந்தப்
பொன்னுலகத் தின்னலறப் போக்குவதற்கே
உத்தமத் தூதனையே--நானனுப்பி
உன்னையழைத் தேன்அதிக நன்னலமதாய்
வந்துவல் அசுரர்பகை--முழுதற
மாய்த்துவ லாரியெனும் வலிய பெயர்
நான்உற உதவிசெய்தாய்--அதற்கொரு
நல்லகைம் மாறறியேன் நாவார
உன்றனக் கெதுவிழைவோ--என
உரியஇம் மூர்த்திகளைத் தருக என்றாய்
கேட்டுளம் மிகவருந்தி--மாயவன்,முன்
கிருபையி னால்எனக் களித்தனனால்
அவன்உடன் பாடும்உற--வேணுமென்றே
அறைந்தனன், நிறைந்தபாற் கடலேகி
நாரா யணன்வரம்நீ--பெற்றுவந்த
ஞாயத்தை நான்மறத் திடுவேனோ
தந்திடுவேன் மூர்த்திகளை--நீகொண்டு
சந்தோட மாய்ப்புவியில் தாபனம் செய்வாய்
வேண்டிய பலபயனும்--தடையற
வேண்டுநர் பெறத்தரும் இம்மூர்த்தி
தியாகனென் றிடும்பெயரே--திருவருட்
சிறப்புடன் குலவிடும் திருவருளே. பூவில்முசு (30)

முற்றிற்று

ஹனுமான் அச்சியந்திரசாலை, விழுப்புரம்.

## நூலாசிரியர் அருளிய முக்கிய நூல்களுட் சில.

| | | | |
|---|---|---|---|
| புலவர் புராணம் (அச்சில்) | ... | | |
| திருவரங்கத் திருவாயிரம் | ... | 2 | 00 |
| தமிழலங்காரம் | ... | 0 | 50 |
| திருவாமாத்தூர்த் தல புராணம் | ... | 2 | 00 |
| கௌமார முறைமை | ... | 0 | 50 |
| தியானுனுபூதி (உரையுடன்) | ... | 0 | 50 |
| தேவகோட்டை முருகன் பிள்ளைத்தமிழ் | ... | 6 | 50 |
| சென்னை முருகன் பிள்ளைத்தமிழ் | ... | 0 | 50 |
| சிதம்பரம் பாண்டிநாயகம் பிள்ளைத்தமிழ் | ... | 0 | 50 |
| தண்டபாணி சுவாமிகள் வரலாறு (உரைநடை) | ... | 0 | 50 |
| சடகோபர் சதகத்தந்தாதி | ... | 0 | 50 |
| தண்டபாணி விஜயம் | ... | 1 | 50 |
| அருணகிரிநாதர் புராணம் | ... | 1 | 50 |
| தில்லைபாதி — நெல்லைபாதி | ... | 0 | 10 |
| குருநாதன் அந்தாதி | ... | 0 | 50 |
| குருபரதத்துவம் (சுவாமிகள் அனுபூதியுடன்கூடிய வரலாறு) | ... | 2 | 00 |

மற்றும் பிற.

கிடைக்குமிடம் :

**தி. செ. முருகதாச ஐயா,**
தலைவர், கௌமார மடாலயம், திருவாமாத்தூர்,
விழுப்புரம் அஞ்சல்.

ஹனுமான் அச்சியந்திரசாலை, விழுப்புரம்.